சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௦, ஐப்பசி	பரல்
௩௪	நவம்பர், 1959	௩

திருச்சிற்றம்பலம்

திருவருள் பெற்றார் செயலனைத்தும் சிவன் செயலே

" திருமலர்க் கொன்றையான் நின்றியூர் மேயான்
தேவர்கள் தலைமகன் திருக்கழிப் பாலை
நிருமலன் எனதுரை தனதுரை யாக
நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்
கருமலர்க் கமழ்சுனை நீள்மலர்க் குவளை
கதிர்முலை யிளையவர் மதிமுகத் துலவும்
இருமலர்த் தண்பொய்கை இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணிஎன் எழில்கொள்வ தியல்பே."

—௧. ௭௯-௨.

" ஒழுகலரி தழிகலியில் உழியுலகு பழிபெருகு
வழியை நினையா
முழுதுடலில் எழுமயிர்கள் தழுவுமுனி குழுவினொடு
கெழுவு சிவனைத்
தொழுதுலகில் இழுகுமலம் அழியும்வகை கழுவுமுரை
கழும லநகர்ப்
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகள்
மொழித கையவே."

—௩. ௬௮-௧௨.

" பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்."

—திருக்களிற்றுப்படியார், ௧௨.

"செங்கண் விடையார் திருமலர்க்கை தீண்டப் பெற்ற சிறுவனர்
அங்கண் மாயை யாக்கையின்மேல் அளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி எழுந்த திருவருளின் மூழ்கிப் பூமேல் அயன்முதலாம்
துங்க அமரர் துதிசெய்யச் சூழ்ந்த ஒளியில் தோன்றினர்."
—கஉ. சண்டேசுரர், ௫௫.

உயிர்க்குயிராம் உடையவன் ஒருவனே. அவனே இன்பவடி வினன்; இயற்கையுணர்வினன்; துன்பமகற்றும் துணைவன்; இன்பமூட்டும் இறைவன்; முடிவிலாற்றலன்; பேரருளினன்; முத்திறப்புணர்ப்பால் எத்திறத்துயிர்களையும் தன் இணையடிக் கண் ஈடேற்றுபவன்; பிழைபொறுக்கும் விழைதகு விழுமி யோன்; சார்ந்தாரைக் காக்கும் தலைவன்; அடியார்க்கு எளியன்; கடியார்க்கு அரியன்; கண்ணுதலோன்; காதல் மங்கையின் ஒரு கூறன்; ஓதலுறுவார்க்கு உள்ளொளியன்; தில்லைத் திருச்சிற் றம்பலவன்; எல்லையில் புகழோன்; திருவைந்தெழுத்தாய்த் திகழ்பவன்; பொருவரும் "தென்னா டுடைய சிவன்; எந்நாட் டவர்க்கும் இறைவன்" எம்மை அடிமைகொள்ளும் ஆண்டான்.

ஆருயிர்கள் பண்டே புல்லிய மலநோயின் வயப்பட்டுத், தம் அன்பு அறிவு ஆற்றல்கள் விளங்குதற்கு வாயிலின்றி, இருள்சார் கண்போல் இயக்கமும் செயலுமின்றி மயக்குற்றுக் கிடந்தன. வேறுகாரணமின்றி அவ்வுயிர்களைப் பற்றிய மலவாற்றல்களும் பல திறத்தனவாகும். பெருந்தண்ணளி வாய்ந்த விழுமிய முழுமுதல், அவ்வுயிர்களைத் துன்பத்தினின்றும் விடுவித்துத், தன் திருவடிப் பேரின்பத்தினை நுகர்வித்து ஆட்கொண்டருளத் திருவுளங் கொண்டருளினன். அதன்பொருட்டு மாயாகாரியங்களாகிய உடல், கருவி, உலகம், ஊண் முதலியவற்றைத் திருவருளாற்ற லாற் படைப்பித்தருளினன். படைப்பித்த இவற்றுடன் பல் லுயிர்களையும் முறையுற இயைவித்தருளினன். இத் திருவருட் செயலினையே ஏற்றுரையாக உலகோர் உயிர்களைப் படைத்தருளி னன் என்பர். உயிர்களும், உயிர்களைப்பற்றிய மலமும், அம் மலப் பிணிப்பை அகற்ற அருந்துணை புரியும் உடையானும், அத் துணைக்கு உதவியாம் காரணமாயை வினைகளும் என்றுமுள்ள பொன்ருப் பொருள்களேயாம். இவை எவரானும் படைக்கப்பட் டனவல்ல.

இவ்வுண்மை வரும் தமிழாகமமாகிய திருமந்திரத்தான் உணரலாம்:

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே."
—க0. கஙக.

மும்மலப் பிணிப்புடைய ஓரறிவுமுதல் ஆறறிவு ஈறாகவுள்ள உலகியற் படைப்பும், அத்தகைய மும்மலப் பிணிப்புடைய வானுலகத் தெய்வப் படைப்பும், அதற்கு மேலுள்ள சிவவுலக வாழ்வினராகிய இருமல ஒருமலப் பிணிப்புடைய சிவப் படைப்பும் எனச் சிவபெருமான் செய்தருளும் படைப்புப் பலவாகும். அனைத்துயிர்கட்கும் மலங்காரணமாக நுண்ணுடல்களும், வினை காரணமாகப் பருவுடல்களும் அமைகின்றன. இவற்றை வருமாறு நினைவு கூர்க.

மலச்சார்பால் நுண்ணுடலும் மற்றுவினைச் சார்பால்
உலவு பருவுடலும் உண்டு.

இவ்வுண்மையினையே செந்தமிழ்ப் பொதுமறையாம் திருக்குறள் வருமாறு ஓதுகின்றது :

“ பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.” —௯௭௨.

நுண்ணுடற்குக் கருவிகள் எட்டு. அவை பூதமுதலாகிய தன் மாத்திரைகள் ஐந்தும், மனம், எழுச்சி, இறுப்பு என்னும் மூன்றுமாம். இந்நுண்ணுடலமைப்பு அனைத்துயிர்க்கும் ஒன்றே. படைப்புக் காலந்தொட்டு ஊழி முடிவுவரையும் எவ்வகை மாறுதலுமின்றி இருப்பதும் இவ்வுடலே. இவ்வுடல் ஊழி முடிவில் மாயையின்கண் ஒடுக்கப்படும். இடையே வீடுபெறெய்தும் உயிர்கட்குரிய நுண்ணுடலும் மாயையின்கண் ஒடுக்கப்படும். இந் நுண்ணுடலைப் பிறப்புடலெனவுங் கூறலாம். இவ்வுடல் இருவினை இயற்றத் தகுதியாய் அதற்குக் கருவியாம் பருவுடலை அவாவி நிற்கின்றது. பருவுடலோடு கூடிச் செய்யும் செயல்களால் சிறப்பும் சிறப்பின்மையும் காணப்படும். எடுத்துக்காட்டாக, கையுள்ள நாம் உண்டல் பருகல் முதலியவற்றைக் கையின் துணையாலேயே செய்கின்றோம். யானை, மந்தி முதலிய கையுள்ள விலங்குகளும் கையின் துணையினாலேயே அவற்றைச் செய்கின்றன. இவற்றையொழிந்த ஏனையவுயிர்கள் வாயினாலேயே உண்டல் பருகல்களைச் செய்கின்றன. உண்ணும் செய்கை இரண்டற்கும் ஒத்ததே. ஆயின் இத்தகைய சிறப்பும் சிறப்பின்மையும் பருவுடல்களால் நிகழ்வன. எனவே பருவுடற் பிறப்பைச் சிறப்புப் பிறப்பெனவுங் கூறலாம்.

ஆருயிர்கள் பண்டே இருளோடு புல்லிக் கிடந்த நிலைமையினைப் பேதைமை என்ப. பின்பு இறைவன் தண்ணளியால் மாயையினின்று உடல், கருவி, உலகம், ஊண் முதலியவற்றைப் படைத்துப் பொருத்தியருளினன். அதன்பின் அவ்வுயிர்கட்கு அச் சார்பினால் சிறிது அறிவு விளங்குவதாயிற்று. அவ்வறிவு

மாயாகாரியச் சார்பினுல் விளங்கியது. அம் மாயை மலமாகிய இருள் முனைப்பால் தூண்டப்பட்டுத் துணையாக நிற்பதால் தெருளுக்கு வாயிலாகாது மருளுக்கு வாயிலாகின்றது. இம் மருள் நிலைமையினைப் புல்லறிவாண்மை என்ப. தன்மாட்டுந் தன்னைச் சார்ந்தார் மாட்டுங் கொள்ளும் அன்பின் பெருக்கால் நிகழும் அறிவினை நல்லறிவுடைமை என்ப. பின் திருவருள் நினைப்பால் அருள்முனைப்புண்டாம். இவ் வருண்முனைப்பால் விளங்கும் உணர்வினை மெய்யுணர்வு என்ப. இம் மெய்ப் பொருளுணர்வால் சிறப்பென்னும் செம்பொருளாம் சிவபெருமான் திருவடியினைச் சேர்வர். சேர்தல் - இடைவிடாது நினைத்தல். இந்நினைவால் மெய்ப்பொருளாம் சிவன் மேலோங்கித் தோன்றியருள்வன். அருளவே அத் திருவருள் பெற்ருர் மெய்யடியார் என வழங்கப் பெறுவர்.

இக்குறிப்புக்களை நினைவுகூர்தற் பொருட்டு வெண்பாவில் தருகின்ருேம் :

உற்றபெரும் பேதைமையை ஓரின் இருள்முனைப்பாம்
பற்றமருள் புல்லறிவாம் பாங்கன்பாற்—பெற்றவளம்
நல்லறிவாம் மெய்யுணர்தல் நாடின் அருள்முனைப்பாம்
புல்லலடி மெய்மேவல் போற்று. மெய்—மெய்ப்பொருள்.

ஒருவர்தம் நினைவின் வழியே சொல்லும் செயலும் நிகழ்வனவாகும். எனவே அச் சொல்லும் செயலும் அந் நினைவின் வழிப்பெயரும் பயனும்கொண்டு நிற்கும். அறநினைவுடையார் தம் சொல்லும் செயலும் அறமெனவேபடும். அதன் பயன் செய்வார்க்கும் செய்யப்படுவார்க்கும் இன்பமேயாம். வேந்தன் ஆணை வழி நிற்பார் சொல்லும் செயலும் வேந்தனுடையனவேயன்றிச் செய்வாருடையனவாகக் கொள்ளும் முறைமை யாண்டுமின்று. ஏவலர் செய்வன ஏவுவோரைச் சார்வதும் ஈண்டுக் கருதுக. ''எய்தாரை நோவாது அம்பை நோவதுபோல்'' என்னும் பழமொழியும் இக் கருத்தினை வலியுறுத்தும். திருவள்ளுவப் பெருந்தகையாரும் இக் கருத்துப் புலப்பட வருமாறு ஓதியருளினர் :

''என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர். —திருக்குறள், ௭௭௧.

(தொடரும்)

மணிவிழா மாண்பு

[சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாதபிள்ளை]

மணிவிழா மாண்பமை ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கட்கு 9-10-1959 இல் மணிவிழா சிறப்பாக நடந்தேறிற்று. மணி விழாக் குழுவினர் அரிதுமுயன்று மணிவிழா மலர் ஒன்று வெளி யிட்டுள்ளார்கள். அது செவ்வையாக அமையப்பட்டுள்ளது. அதன்கண் அன்பர் சீபால், அவர்களின் வாழ்க்கை வரலாறு களும், பணியும், தொண்டும் பலபடப் பாராட்டி விளக்கப்பட் டுள்ளன. மணிவிழாவை வாழ்த்தி விடுத்த அமைச்சர், ஆட்சி முதல்வர், பேராசிரியப் பெருமக்கள், பல்வேறு கழகத்தார் முதலியோருடைய பொன்மொழிகள் நன்கு மிளிர்கின்றன.

யாமும் சுருக்கமாக வரைகின்றோம். நம்மருமைச் சீபால் அவர் கள் பண்டு கல்வியிற் கரையிலாததென்று புகழப்பெற்ற காஞ்சிமா நகரை யடுத்துள்ள திருப்பறம்பூரில் சிறந்துள்ள சந்தண நயினார் கால்வழியில் திரு. குணபால நயினார் அவர்கட்கும் அவர்தம் கற்பிற் சிறந்த மனைவியார் திருமதி குழந்தை அம்மாளுக்கும் தவப்புதல் வராய்த் தோன்றினர். தோன்றிய நாள் 1900-ஜூலை என்ப. இவர் பிறந்த நான்காம் நாள் அன்னையார் இறந்துவிட்டனர். ஐந்தாம் அகவையில் பள்ளிக்கு வைக்கப்பட்டனர். நன்கு பயின்றனர். பின் தாய்மாமனார் துணையால் காஞ்சீபுரம் முனிசிபல் பள்ளியில் பயின்றனர். பின் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் பயின்ற னர். 1919 இல் உடல்நலக் குறைவால் பள்ளிப்படிப்பை விட நேர்ந்தது.

பின் தம்மூருக்கு வந்து செந்தமிழ்த் தொண்டிலும் சமயத் தொண்டிலும் பெரிதும் ஈடுபடுவாராயினர். உள்ளூரில் தரும சாகர சுவாமிகள் திருப்பெயரால் அவ்வூர்த் திருக்கோவிலின்கண் சிறந்ததொரு நூல்நிலையமும், படிப்பகமும் நிறுவிப் பொதுமக்க ளின் நல்லறிவு வளர்ச்சிக்கும் ஒற்றுமை வாழ்விற்கும் பெரிதும் பாடுபட்டனர். நல்ல அகத்தியப்ப நயினார் என்னும் புலவர்பால் சூடாமணி நிகண்டு, நாலடியார், திருக்குறள் முதலிய நூல்களைப் பயின்று வந்தனர். பின்பு அவர்பாலே சிந்தாமணியும் பாடங் கேட்டுச் சிறந்தனர்.

சீபால் அவர்களின் பத்தொன்பதாம் அகவையில் கற்பும், பொற்பும், கல்வியும், செல்வமும், ஈகையும் இரக்கமும், விருந்தோம் பலும் கடவுட்பற்றும் முதலிய நற்பண்புகள் ஒருங்கமைந்த நங்கையினை அவருக்குத் திருமணம் செய்வித்தனர். இருவரும் காதலொருமித்தவராய் மனையறம் பேணி வாழ்ந்து வந்தனர். மனைவியார் பெயர் மாணிக்கத்தம்மாள் என்ப. கரந்தைச் சிற்றூரி

ளுள்ள அருகர் திருக்கோவிலில் நடைபெறும் பத்துநாள் திருவிழாவில் சமணப்பண்டிதர் பலரையும் வருவித்துச் சொற்பொழிவு ஆற்றச்செய்வர்; தாமும் அரியதொரு விரிவுரையாற்றுவர். 1922 ஆம் ஆண்டில் காங்கிரசில் சேர்ந்து கடமையாற்றினர். கட்டிளமைப் பருவத்துக் காங்கிரசில் சேர்ந்தமைமட்டுமன்றி அஞ்சா நெஞ்சினராய்ப் பணியும் புரிந்தனர். அது வருமாறு: "ஒரு நாள் மாலை வடஆற்காடு மாவட்டம் செய்யாற்றுக் கோட்டம் தண்டலாளர் (தாசில்தார்) காங்கிரசுக்கு எதிராக ஒரு கூட்டம் கூட்டிச் சொற்பொழிவாற்றினர். அச் சொற்பொழிவில் வெள்ளையரால் நேர்ந்த வியத்தகு பயன்கள் பலவெனப் பாராட்டிப் பகர்ந்தனர். அம்மட்டோடமையாது, காந்தியடிகளைக் குறைகூறவும் தொடங்கினர். தொடங்கிக் 'காந்தி அவர் பேசுவதெல்லாம் வாந்தி' என வுரைத்தனர். உடனே நம் பாலவர்கள் சிறிதும் அஞ்சாது மறுத்துக் 'காந்தி அவர் பேசுவதெல்லாம் சாந்தி' என மொழிந்தனர். இதுபோன்ற நிகழ்ச்சிகள் பல.

1923இல் சென்னையில் நடந்துவந்த "தருமசீலன்" என்னும் சைனப் பத்திரிகைக்கு வித்துவான் ஆறுமுகம் சேர்வையவர்கள் ஆசிரியராகவிருந்து நடத்திவந்தனர். நம் பாலவர்கள் அப் பத்திரிகைக்கு ஒரு வாழ்த்துக் கும்மி பாடி விடுத்தனர். அதன் வாயிலாக இவர்தம் பெரும்புகழ் புலனாயிற்று. புலனாகவே இவரை அழைப்பித்துத் துணையாசிரியராக அமர்த்திக் கொண்டனர்.

திருப்பறம்பூருக்கு அண்மையிலுள்ள சித்தாத்தூர் என்னும் சிற்றூரில் பாரத விரிவுரை தொடர்ந்து நடக்கும். அதைக் கேட்டுணர நம் பாலவர்களும், அப்பாவு ஆச்சாரி அவர்களும் போவது வழக்கம். இவ் அப்பாவு ஆச்சாரியவர்கள் திரு. நல்ல அகத்தியப்ப நயினாரவர்களிடமும், சாமி நயினார் என்னும் மற்றொரு பெரும் புலவரிடமும் முறையாகத் தமிழ் பயின்றவர். இருவரும் பாரத விரிவுரை கேட்டதன் பயனாகச் சிந்தாமணி விரிவுரையாற்றல் வேண்டும் என்னும் எண்ணம் தோன்றிறறு. சிபால் அவர்கள் சிந்தாமணியினைத் தொடர்ந்து விரிவுரையாக ஆற்றி வந்தனர். மக்களும் ஏராளமாகக் கூடி மகிழ்ந்தனர். தொடர் விரிவுரை—புராண படனம். நம் பாலவர்கள் தந்தையாருக்குக் கடன்கொடுத்த பலருக்கும் நம்பகக் கேடு உண்டுபண்ணக்கூடிய நேர்மையற்ற வழியில் வழக்குத் தொடர மறுத்துவிட்டனர். அதனை நாட்டவர் கேட்டுப் பெரிதும் போற்றினர். ஆனால் அவர்தம் தந்தையாருக்குமட்டும் சிறிது மனத்தாங்கல் ஏற்பட்டது. அதனையும் நம் பாலவர்கள் பொருட்படுத்தவில்லை.

திருப்பறம்பூரையடுத்த நெல்லிக் கிராமத்தில் பஞ்சாயத்துப் போர்டு பள்ளியில் பள்ளியாசிரியராகப் பணிபுரிந்தனர். குஜராத்தி

துள்ள பாலிடாணு என்னும் ஊரிலிருந்து ஸ்ரீகம்பீரவிஜயாஜி முனிவர் நான்கு மாணவர்களுடன் சென்னைக்கு வந்தனர். அவர் தூண்டுதலின்மேல் 1926 இல் "தென்னிந்திய சீவரட்சக பிரசார சபை" தொடங்கப்பெற்றது. நம் பாலவர்கள் அதில் சேர்ந்து தொண்டாற்றினர். சிற்றுயிர்ப் பலியை நிறுத்துவதே அச்சபையின் பெருநோக்கம். அதற்கே பலரும் பாடுபட்டனர்.

நம் பாலவர்கள் பலித்தடையின் பொருட்டுத் தமிழக முற்றிலுமுள்ள சிற்றூர் பேரூர் நகரம் எல்லாவற்றிற்கும் பன்முறை சென்று எல்லா மக்களும் இனிதுற இணங்குமாறு தம் இன்முகப் புன்சிரிப்புடன் எளிய இனிய தெளிவு நடையில் சொற்பொழிவுகள் ஆற்றி மக்களை வயப்படுத்தி நிறுத்துவித்தனர். அவ்வரிய பெருந் தொண்டால் இவர்தம் நெடும்புகழ் குன்றின் மேலிட்ட விளக்கென மிளிர்கின்றது. சென்னையையடுத்த திருவொற்றியூரில் நிகழ்ந்துவந்த எருமைக்கடாப் பலியை நிறுத்தும் பொருட்டு நம் பாலவர்கள் உண்ணு நோன்பிருந்தனர். பலியும் நிறுத்தப்பட்டது. இதுபோல் எருமைக்கடாப்பலி நிகழ்ந்து வந்த பாளையங்கோட்டை முதலிய பலவூர்களுக்கும் சென்று ஆற்றிய தொண்டினுல் ஆங்காங்கு அப்பலியும் பிறபலியும் நிறுத்தப்பட்டன.

இப் பலிக் கொடுமையினைத் தடைப்படுத்துதற்பொருட்டு நம் பாலவர்கள் சிறந்ததொரு நாடகம் இயற்றித் தக்க துணைவர்களுடன் நடித்துப் பலருடைய பாராட்டையும் பணமுடிப்பையும் பெற்றனர். இப்பெருந் தொண்டின்பொருட்டு 1930 முதல் 1950 முடிய எண்ணிலாச் சிற்றூர்களுக்கும் நாற்பதுக்கு மேற்பட்ட பேரூர்களுக்கும் நலிவையும் மெலிவையும் ஒரு சிறிதும் நாடாது சென்று சென்று தொண்டாற்றியுள்ளனர். இவரும் இவர் போன்ற சிற்றுயிரிரக்கப் பெற்றியரும் செய்த பெருமுயற்சியால் 1951 இல் பலித்தடைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

சிந்தாமணி முதலிய இலக்கியத் தொண்டும் தாமாக நுண்ணிதிணுய்ந்து நூலாக்கி வெளிப்படுத்திவரும் நூற்றொண்டும் நம் பாலவர்களின் நற்றவத் தொண்டாக மிளிர்கின்றன. இவர்கள் இறையருளால் இப்பொழுது எய்தியுள்ள மணிவிழாப்போன்று முத்து வயிர முதலிய பன்மணிவிழாக்கள் பெற்றுப் பயனுர் பணி பலபுரிந்து பல்லாண்டுவாழத் திருவருள் புரியுமாறு சிறப்பருளும் செம்பொருளின் திருவடியை வழுத்துகின்றேம்.

வாழ்க சீபால்! வளர்க வண்டமிழ்! வாழ்க நல்லறம்!

இயற்கை*

(செல்வி, சிலம்பு ௩௪ - பரல் - ௨, ௯௬ ஆம் பக்கத்தொடர்ச்சி)

கடவுளுக்கே இயற்கையை இயக்கும் திறனுண்டென்று யாமாகிய, காணுவுலகவாசி, மறைமலையடிகள், இயக்குநர்வழி யுரைத்து எழுதின மென்பதே, எம் முன்சிந்தனையின் ஊற்றெனத் தெரிவித்துவிட்ட கருத்தினை மீண்டும் துவங்கலாமெனத் திருவருளை யுன்னி உரைக்கின்றனம், வரைகின்றனம், எம்மியக்குநராம் இளைஞன்வழி.

இயற்கை யென்பதென்னை? அவ்வியற்கைக்கொரு திரிபு உண்டா? இயற்கையென வுரைக்கும் எல்லாக் காணும்பொருட்களும் தம் நிலை பிறழாது இயல்பாகவே என்றுமே ஒரே தன்மையிலே, நிலையிலே, காட்சியிலே, கனபரிமாணத்திலே அமைந்திருக்கின்றனவா? இல்லையேல் எங்ஙனை யதனின் நிலையெனவுள கருத்துக்களை ஆய்தல் நலமென யாமாகிய மறைமலை விருப்புடன் வாசகர்களாய தங்களை வேண்டிச் சிந்தித்தாயத் தூண்டுகின்றனம் முதற்கண் ஒன்றினை ஆய்தல் நலம். உவமைக் கொன்றினை மறைமலை யுரைக்குதும். அஃதென்னை? இயற்கையென்பதின் புறத்து அதனை இயக்கும் சத்தியென ஒன்றுண்டென்பதைத் தடுத்துரைக்கும் தன்மையாளர் நிறைந்து வருகின்றனரென்பதுவும் தாங்களறிந்ததே. இவ்விதம் இயற்கையே படைத்த படைப்பின்கண் ஒரு சாரார், கடவுளுண்டென்றும், ஒரு சாரார் கடவுளில்லையென்றும் உரைக்கும் கூற்றினை உற்றுநோக்குழி இயற்கையே! நீ இயல்பாகவே அமைந்தியக்கும் திறனில் இவ்வித வேறுபட்ட விழைவுகளைத் தோற்றுவிக்க முயலுவதென்னை? மாந்தர்தம் மனத்து, நீ இவ்வித மாறுபட்ட உணர்வுகளை ஊக்

---

* அடிகளார் காணுவுலத்துறைந்தும் தமிழ்த்தாயின் மாட்டும், அவள்தன் அருமை மக்களாம் நம்மனோர் மாட்டும் கொண்டுள்ள கழிபெருங்காதலால் இயற்கை எனவொன்றேயுள்ளது; கடவுள் எனவேறொன்று இல்லையெனமயங்கிக் கூறுவார் மயக்கம் முற்று மகன்று உண்மை தெளிந்துய்ய இதற்கு முன்னுள்ள கட்டுரையையும், இதனையும் விடுத்துள்ளர்கள். மேலும் தொடர்ந்து கட்டுரைகள் வருமெனவும் வாய்மொழிந்துள்ளார்கள்.

இயற்கைக்குத் தனித்த முறையில் எவ்வகை அறிவாற்றலும் இல்லையெனவும், இயைந்தியக்கும் கடவுளின் திருவருளாற்றலாற்றான் இங்ஙனம் நிகழ்கின்றதெனவும் விரித்து விளக்கித் தெளிவித்துள்ளார்கள். இவற்றைக்கூர்ந்து கற்றுப் பயனெய்துவதுடன் அடிகளார்க்கு வாழ்த்தும் வணக்கழும் என்றும் மறவாது புரியவேண்டி நன்றிக் கடப்பாடுடையோம் என்பதையும் நாம் கைக்கொள்ளுதல்வேண்டும்.

குந் திறன் உனக்குத் தோன்றியதெங்ஙனே? உரை; அறியட்டும் இவ்வுலகு. இயற்கையே உன்திறமெங்ஙனே? இன்னும் உன்னை வினவுகின்றனம். இயற்கையே நின்திறனை ஒரு கவிஞன் எவ்விதமுணர்கின்றான்? உரைக்குதும். "நான் இயல்பிலே யமைந்த வானளாவிய சோலைக்குட் புகுந்தேன்; கண்டேன்; வியந்தேன்; வியக்கின்றேன். நெடுமரமே! உன்னருகு வந்து உன்நிழலிலே வந்தமர்ந்தால் நீ களைப்பினைப் போக்குகின்றாய். செவிக்கோர் இன்னிசையை அளிக்கின்றாய். என் சிந்தனை நிலைதிரிந்தலைந்ததை ஒருமுகப்படுத்தி என்னுள்ளத்துள் ஓர் உணர்வினை ஊட்டுகின்றாய். என் பசியினைப் போக்கச் சுவைமிகு கனிகளைத் தருகின்றாய். கதிரவனின் வெப்பா லுன்னிடம் வந்தால் நீ எனக்குத் தண்மையினை யளிக்கின்றாய். உன் நிழலிலே யமர்ந்து தனித்திருந்து உன்னுங்கால் என்கருத்தில் ஓர் ஊற்றினை நீ தோற்றுவிக்க முயல்கின்றாய். என் தடை பெற்ற கருத்தெல்லாம், என்னிதயத்தோர் ஊற்றாய் நனிவளம் சுரக்கக் காண்கின்றேன். உன்னை என்னையென உரைப்பதெனக் கவிஞனும் என்கருத்திலே தோற்றுவிக்கவில்லையே! நீ என்னை வா வா என விளிக்க, உன் தளிரிலைகளையே கையெனக்கொண்டு, தென்ற லென்றவொன்றுட னியைந்தழைக்கும் திறனை நோக்குழி, என் அகமெலாம் இனம் புரியா எழுச்சி எழுகின்றதே. நீ தென்றலுடன் இசைத்துப் பாடும் உன் ஓதை என் செவிமடுத்து இன்பக் கருத்தை என்பா லெழச் செய்கின்றதே! காதலின்பம் என் கருத்தைத் துளைத்து என் நிலை பிறழ்கின்றதே! உன்னை என்னையென நினைய? நாவா லுரைக்குந் திறனுமற்று, இனம்புரியா எழுச்சிகளென்னை எங்கோ இழுத்துச் செல்கின்றதே! நெடுமரமே! உன்னை என்னையென அழைக்க? இயற்கை யென்றுரைக்க உன்னினாலும் அங்குமோர் தடை யெழுகின்றதே, உணர்கின்றேன் என்னையென; உனக்குச் சிறிது அப்பாலே உன்னினமே நெடியதோரொன்றாய் நிற்கின்றதே! அதிலெனக்கோர் தூண்டுதல் எழாததென்னை? முட்களையே தன்னகத்துக் கொண்டும், அதிற்றோன்றும் இலைகளும் முட்களே கொண்டும், கனிகளைக் காணாது, கருநிறங்கொண்ட காய்களேயென ஒன்றே தோன்றுகின்றதே, கதிரவனொளி அங்கு நிலைக்கின்றதே, அண்மையிலே செல்ல எம் கருத்தெழத் தடைப்பட்டதெங்ஙனே? இங்கு மலையிடையே உங்களைப் பேணுதற்கென எவருமில்லையே, நீர்பாய்ச்சி, நிலம் வெட்டி, உரமிட்டு உன்ன உரித்தார் இங்கில்லையே. என்னையெனப் பொருள் கொள? உரை, நீயே உரை. ஏன் வாளாவிருக்கின்றனை? சிந்திக்கின்றாயா? சிந்திக்கும் திறனற்றுத்தானிருக்கின்றனையே! நான் வினவுகின்றேன், நீ வாளா விருக்கின்றாய், ஏன்? மாந்தர்தமக்குப் பகுத்தறிவொன்றனைக் கூட்டி

இயைத்தது, உன் இனத்திற்கு மட்டிலும் ஓரறிவைக் குறைத்ததே னென்ற சினமா? விந்தையிலும் இது விந்தையே! எது எங்ஙனே யானும், நானொரு தீர்வினுக்கு வந்தனன், உரைக்கின்றேன், கேள்.

நெடுமரமே! நீ கலங்காதே, குணக்குன்றும் கோமகனே தன் நிலைபிறழ்தலில்லையோ, தரணிதன்னில் மாந்தர்தம் மாண்பு இழத்தலில்லையோ, மக்களிலே வேற்றுருவுகொண்டு வாழ்வாரு மில்லையோ, இயற்கையென வொன்றிது ஈவதில்லை. இயற்கை யென ஒன்றிற்கு இத்திறனில்லை. நெடுமரமே! தண் நிழலாம் உன் நிழலிலிருந்து உற்று நோக்குகின்றேன் தொலையதிலே, காண்ட லென்ற ஒன்றினுக்காய் நீ இவ்விதம் கானகத்துக் காண்கின்ற னையோ? தென்றலென ஒன்று சுமந்துவரும் நறுமணமொன் றிலே நான் கருத்திழந்து அளப்பரிய இன்பத்தினை, மணத்தினை நுகர்கின்றேன். நுவல்கின்றேன், கானகத்துக் கவினுறு காரி கையா இங்குத் தோன்றினளோ, காதலின்பம் ஈந்து களைப்பினைப் போக்கி, எண்ணாத எண்ணமெல்லாம் வினைந்து அமைதி நாடி வந்தவனும் என்னை, வாரியிழுத்தணைத்து எனக்குமோர் இன்பம் நல்குகின்றனளோவென எண்ணுகின்றேன். என் கருத்தினி லோரின்பம் இன்று தோன்றியதுபோல், என்றுந் தோன்றிய தில்லையே! பொறு, நுவல்கின்றேன். இயற்கையோவென எண் ணினும் அதுதானில்லையென எண்ணுமோர் சூழலும் இங்குறை கின்றதே. அமைதியெனவொன்று எனக்கீந்த அன்னையெனவும் உன்னுகின்றேன். ஏன்? கானகமே, ஓர் அன்னையெனவும், அதன்கண் உறைகின்றதெல்லாம் அன்னை வாரி யளித்த வளமெனவும், வையத்து நிலப்பரப்பை வளமுற்றதாக்கித் தன் கருணையெல்லாம் உன்னகத்தே வைத்துக் களைத்துவரும் கவிஞ னும் எனக்கு மட்டுமில்லை. நாடு துறந்து காடோடி வரும் கோம கனும் துறவுகொண்டு தனிமைவெளி எங்கென விரைந்துன் னையே நோக்கிவரும் துறந்தார்க்கும், திருடலென்ற தன்மையிலே வாழ்ந்துவரும் ஒரு மகற்கும், தொழிலற்றுத்திரிவார்க்கும் நிலப்பரப்பில் பயனீயும் கழனிக்கெல்லாம் உன்னகத்தே உயி ரென்ற நீரொன்றைத் தன்னுட்கொண்டு, உலகிற்கெல்லாம் ஓர் அன்னையேயென வாழ்த்துகின்றேன். அன்னையே, உனக்கித் திறன் அளித்ததெவர்? இயற்கையா? உரை, உன்னு, உன் சிந்தனைக்கே விட்டுவிட்டேம். உலகத்து மாந்தரே! சிந்திமின், சிந்தித்தாய்வு காணுமின், சிறக்கவாயுமின் சிந்தனையாளரே!

கவிஞனும், என் மனத்து நீ அன்னையெனவும், ஆறுதலளிக்கு மோர் நண்பனெனவும், நாட்டிற்கெல்லாம் நன்மையளிக்குமோர் வள்ளலெனவும் கருத்திற்கெல்லாம் ஊக்கிவரும் உறுதுணைவ

னிற் சிறந்தவனெனவும், காதலுக்கோர் உறைவிடமெனவும், சிந்தைக்கோர் செவிலியெனவும், சீர்பெற்ற திருக்கண்ணினுக்கோர் கன்னியெனவும், திண்மைகொண்ட தோள்களுக்கோர் நாதனெனவும் நினைந்தாலும் உன்னை இயற்கையெனக் கருத்துட்கொளச் சிந்தனை தடைப்படுகின்றதே. உன்னை இவ்விதமெல்லாம் இயக்கவைத்ததென்னை? உரை. நீ இயல்பிலே யமைந்திருந்தால், கால வேறுபாட்டினால் நீ உன் களையிழந்தும், கவின்கொண்டும், இருப்பதேன்? உன்னகத்தே மாந்தர்க்குக் கொடுந்துன்பம் இழைத்துவரும் விலங்கினங்களும் உன்னிடமுறைவதேன்? உரை. உன்னை அன்னையெனவும், நண்பனெனவும், கருத்திற்கோர் ஊற்றளித்து உன்னை வியக்கத் துணையளித்த துணையெனவும், காதல் நல்லாளெனவும் கருத்துட்கொண்டு உன்னைப் போற்றினாலும், உன்னகத்துக்கொண்டிருக்கும் விலங்கினங்களைக் காணுழி, உன்னைப் பகைவனெனவுங் கொண்டால் என்னையெனவும் எம்முள்ளிலோர் ஒளி வீசுகின்றதே. என்னை இவ்விதமெல்லாம் நினையவைத்து நிலைபிறழச் செய்யும் தன்மை இயல்பிலே அமைந்திருத்தலென்பது உண்மையானால் நீ ஒரு குறிக்கோளுடன் இயக்குதலே திறனன்றி, உன்சிறு செய்கைகளைக் கருத்துட்கொண்டால், இயற்கையே, உன்னையுமோர் சத்தி உன் புறத்திருந்து இயக்குவதால்தான் நீ இத்துணை நாடகமாடி வருகின்றனை; இல்லையே லுனக்கிவை அமையா. பொறு, இன்னும் ஒன்றுரைக்கின்றேன். தொழிலற்றுத் திரிவார்க்கும் வணிகப் பெருமக்களுக்கும் வளமுறு தொழில்வளமும், பொருள்தரு பொன்மணிகளும் நின்னகத்தே கொண்டுறைவதை யுன்னினால், இயற்கையென உன்னை இவ்வுலகுக்கு அளித்தவன் எம்மிறையே. கடவுளே இவ்விதமெல்லாம் உன்னை இயக்குகின்றன னென்பதை, எளியனும் கவிஞன் வாழ்த்துகின்றேன். உன் திறனென்னையென நோக்குழி, உன்புறத்திருந்தியக்கும் அரியதோராற்றலே, கடவுள். அன்னவரே மாந்தராம் நம் இனத்திற்கு அன்னவரின் வியத்தகு செயல்களை அறிவிப்பான் வேண்டியே, இயற்கையெனவொன்றினைக் காட்டி அருளளிக்கின்றனன். அவனன்றி ஓரணுவுமசையாதெனும் கருத்தை வலுவிலே அறிவிக்கும் கருத்துட்கொண்டு, இங்ஙனைத் தோற்றுவித்தனனென அவனை வணங்குதும் யாமாகிய மறைமலை.

இயல்பிலே அமைந்ததொன்றும் இயற்கையினைக் கடவுளின் கலை யெனவும், கலை யென்பது இயற்கையின் முழுமையே யெனவும், இயற்கை யென்றுமே பொய்யினை ஒப்புதலில்லை யெனவும், இயற்கை உண்மையின் தோழனெனவும், இயற்கை ஆண்டவனொருவனால் ஆட்டிவைக்கப்படுகிற தெனவும், இயற்கை உலகினைத் தோற்றுவிக்கும் திறனுள்ளதும், ஒழுங்கு படுத்தும்

சத்தியுடைத்தெனவும், இவ்வுலகத்துக் காணும் பெருக்கப் பெற்ற பொருட்கள், உயிர்களனைத்தும், உண்மையெனவொன்று எங்கு நின்றிலங்குகின்றதோ, அங்கே காணுபவனே கடவுளெனவும், சிந்திக்கச் சிந்திக்கக் காணுகின்றேன். இயற்கையே! உன்னை நினைந்துருகி எண்ணி எண்ணி இன்புறுங்கால் என்னையறியாதோராற்றல் எம்முள்ளெழுந்து, இயற்கையே உன்னை இவ்விதம் ஓர் ஆசிரியனெனவும், அமைதியளித்த குருவெனவும், உன்திறன் என்னையென உன்னி உன்னிச் செல்லுங்கால், உன்னை இத்தன்மை கொண்டு இவ்வுலகுக்களித்தவன், கடவுள். இயல்பிலே எம்போன்ற கவிஞனைாக்கும் செயல் உனக்கீந்தவன் கடவுளே யெனவும் கடையிற் கண்டேனெனவும், பலரும் பலப் பல விதத்தில் உன்னைப் புகழ்கின்றனரே. புரியவில்லை யுலகுக்கு நீயே உரை. அச்சத்தி யுனக்கில்லையே! என்செய? நீதான் உணர்த்த வேண்டும். இயற்கையென்பது, எனக்கும் மேம்பட்ட வொன்றினாலே, நான் இயக்கப்பெற்று வருகின்றேன். உலகமே, என்னை இயக்குபவன் அனைத்து வல்லமையுள்ள ஒருவனே கடவுளென நீயுரைத்து எங்கள் மனத்துட்டோன்றி உரைத்தாலே, அதுவும் கடவுளார் இல்லை யெனவுரைக்கும் கும்பலிலே நீ நேர் முகத்தானின்று உணரச்செய்து எமக்கு வேண்டும் தெளிகருத்துக்களை ரைத்தாலே, எம் நண்பர்குழாம், பூவுலகு, உணருமேதவிர ம்போன்ற காணுவுலகவாசிகளாம், கற்பனைக் கதாநாயகர்கள் எடுத்து இயக்குநர்வழி வரையும் கட்டுரை புனையுரையென நம்புவரே அல்லாது, வேறில்லை யெனவுள கருத்தும் நீ அறிவதல்லவோ?

இயற்கையே, நீதான் தோற்றுவிக்கின்றனையெனக் கருத்துள்ள மக்களும், உனக்கு மேம்பட்ட சத்தியாம், கடவுளே தோற்றுவிக்கின்றனனெனக் கருத்துள்ள மக்களும், அவரவர் அன்னைவழி ஓர் அமைப்பிலே கருத்தரித்துப் பெற்ற மக்களல்லரோ? இவ்விதமேன்? ஓர் அமைப்பிலே தோன்றிய மக்களின் கருத்துக்களில் இங்ஙனை வேறுபாட்டினாலாய கருத்தெழுந்ததெங்ஙனை? உரை, நீயே தீர்ப்புக்கூறு.

வாசகர்களே! யாமாகிய, தாம் காணுவுலகவாசி மறைமலையாம் இயக்குநர்வழி வரைந்தவர், இயற்கையென்றவொன்றினை உலகினுக்கீந்தவனே "கடவுள்" என எம் கருத்தைத் தெரிவித்து எஞ்சியுள்ள கருத்துக்களைத் தங்களினாய்வுக்கே விட்டுவிடுகின்றனம்.

(தொடரும்)

காலவரை கிடையாது

பெண்ணின் பெருமை*

திருவரங்க நீலாம்பிகை யென்னும் ஒருமகள்—ஆவி உலகில் புண்ணியப்பகுதியி லுறைபவளாகிய நான் "பெண்ணின் பெருமை" யென்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைய விரும்பி, எங்களுலகத் தொடர்பாளரும் எனதன்பிற்குரியவருமாகிய திரு. இரா. ந. குற்றாலலிங்கம்வழி இயக்கி வரைவது.

உலகந் தோன்றுதற்குரியகாலை திருவருள் தன்னருட் சத்தியால் முதலில் ஆண்மகனையே† படைத்தனனென்ற உண்மை எவரும் அறிவதே. பின் ஆண் மகனுக்கு உறுதுணையொன்று, இன்றியமையாததெனத் திருவருள் கொண்டு பெண்மகளைப் படைத்தனனென்ற உண்மையும் எவரும் அறிவதே. அவர்களிருவரின் மருவுதலினால்தான் உலகத்தில் ஆண் பெண் என்ற இரு இனங்கள் பெருகியதென்பதும் யாவரும் அறிந்ததே. இதனை நன்றாகக் கருத்துட்கொண்டால், ஆண் பெண் இருவரின் மருவுதலின்றி வளர்ச்சியுள்ள மக்களினம் பெருகா என்பதை இருபிரிவினரும் கருத்துட்கொண் டொழுகினால் அதன் பெருமை அளவிட முடியாததொன்றாய் அமையும். இவ்விரு இனங்களில், "பெண் ணினத்தின் பெருமை" என்பதே நான் வரைய விரும்பி இயக்குவது.

பெண்ணினம்தான், இவ்வுலகத்துத் தோற்றங்களுக்குத் துணையென்பதனை ஆணினம் மறுக்க இயலாதெனவுள கருத்தை யானாகிய பெண்மகள் எடுத்துரைக்கத் தேவையில்லை பெண்ணே, நாட்டுச் செல்வங்களாம். குழவிகளைத் தன்னுள்ளிருந்தே தோற்றுவிக்கும் ஆற்றலை, ஆண்டவன் அளித்துள்ளவளாய் அமைந்திருக்கின்றாள். அச்செல்வங்களை இன்முகத்தாற் சீராட்டி வளர்க்குமாற்றலும் பெண்ணிற்கே. அவர்களை வளர்த்து, வேண்டுப்பொழுதெல்லாம் பசி நோக்கிப், பசி தீர்க்க உதவும் அமிழ்தமாம் பாலினை அவளகத்தே அமைத்திருத்தலொன்றே,

---

* இச்சீரிய கட்டுரையினைச் செல்வியில் வெளியிடுமாறு 8—10—59 இல் ஆசிரியருக்கு இக்கட்டுரையாசிரியரால் தனிக்கடிதமும் வந்துள்ளது.

† சித்தாந்த சைவமுறைப்படி உலகப்படைப்பு ஆண் மகனை முதற்கண் படைத்துப் பின் அவனுக்குத் துணையாகப் பெண் மகளைப் படைத்தருளினன் பரமன் என்பதன்று. இப்பொழுது காணப்படும் ஞாலத்தியல்பு போன்றே தொன்மையில் படைத்தருளினன் என்பதே. இதுபோலவே வானுலகப் படைப்பும் உண்டு. இவை இயற்கை என்ப. புல்லாகிப் பூடாகி எனக் கூர்ப்பு முறையில் வருவதும் உண்டு. மக்கள் சிறப்பினால் வானவராவது முண்டு. இவை செயற்கை.

பெண்ணினத்தின் பெருமைக்கோர் எடுத்துக்காட்டு. தான் பெற்ற செல்வங்களைக் கண்ணை இமை காப்பதுபோற் காத்தும், அவர்கள் ஏதேனும் நோய்வாய்ப்பட்டு இன்னலுறுங்காலை, பக்கலி லிருந்து ஒக்கலையிலேற்றிக் கண்விழித்துக் கவலையுடனிருந்து வேண்டுவன புரிபவள் பெண்ணே. தங்கள் கணவர்களைத் தங்கள் குழவிகளுக்கு முதலில் அறிமுகப்படுத்துபவளும், பார்! அப்பா என முதல் "அ"காரத்தினை தோற்றுவிப்பவளும், பெண்ணே. இப்பெருமை பெண்ணினத்தையே முழுமையுஞ் சாருமென்பதனை, ஆணினம் அமைதியுடன் ஏற்கும் என்ப தென்ற பெருமையுடையவளும் பெண்ணே. அம்மக்கள் தம் உடம்பைத் தன்னுடம்பினுடன், இறுகப்பற்றி மெய்யுணர்ச்சி அவர்களைத் தொடுவதால் ஏற்படுவதை இன்புடன் நுகர்ந்து தன்னிலை மறந்திருப்பவளும் பெண்ணன்றோ? தம் மக்களின் மழலைச் சொற்கேட்டு இன்புறும் தாய் தந்தையரில், தனியுரிமை கொண்டு தன் மகன் அல்லது தன் மகள் உரைக்கும் புதுமொழி யைப்—புரியா மொழியை, இனிது! எதனினும் இனிது!! ன்று தன் கணவன் அருகிற் கொண்டிருத்தி, காண்க! "என் நழந்தை, என் செல்வம் பேசும் பொருளைச் செவிமடுங்கள், ன் பிள்ளையே, பிள்ளை"யென முதற் பங்கு கொண்டுரைக்கும் பெருமை பெண்ணினத்திற்கன்றோ? தம் மக்களை நல்வழியில் அன்னவர் தம் கருத்துச்செல்ல, தகப்பனே உரியனென எண்ணி னும், அக்கருத்தில் அவர்களை ஈடுபடச் செய்து நல்வழிப் படுத்தல், நன்னயம்கொண்டே, என்ற கருத்தைப் புரிந்து செயற் படுந் திறனமைந்தவள் பெண்ணன்றோ? தன்மகன் நற்பண்பு நிறைந்து, நல்லதொரு நாயகனாய் வாழ்கின்றான் என்பதைக் கேள்வியுறுந் தந்தையைவிட, தானாகிய பெண் அவனைப் பெற்ற காலத்துக் கொண்ட மகிழ்வினைவிட, பெருமகிழ்ச்சியில் ஈடு பட்டுத் தன்னிலை மறந்து அன்புக்கண்ணீருகுப்பவள் அன்னை யாம், பெண்ணன்றோ? இதனையே வள்ளுவப் பெருந்தகையார்,

> "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய்."

என்று ஈரடியிற் பெருமைப்பட உரைத்த சான்றொன்றே போதும், பெண்ணின் பெருமைக்கு. இதுமட்டுமா! இல்லத்து ஒளியாய் விளங்குபவளும் பெண்ணன்றோ? தன் கணவர் கை நிரம்பப் பொருளீட்டி வந்தாலும், அதை வெளியுலகுக்கு அறி விப்பவள் பெண்ணன்றோ? எவ்விதம்? தன் கணவர் கொண்டு வரும் பொருளைத் தன் மக்களுக்கும் தமக்கும் பிற்காலத்துப் பயனுறு துறைகளில் பயன்படுத்தி இல்லறத்தை நல்லறமாக்கும் தன்மையும் உனக்கன்றோ? பெண்ணே! தன் கணவர் சோர்ந்து

வரும் பொழுது நோக்கி அன்னவரின் குறிப்பறிந்து அவர் களைப் பினைப் போக்கும் திறனும் உனக்கன்றோ? பெண்ணே! உனது இல்லினைத் திருமகள் நின்றிலங்க வைக்குந் திறனும் உனக்கன்றோ? பெண்ணே! தன் கணவனின் வருவாய் தெரிந்து அதற்குத் தகுந்தபடி இல்வாழ்க்கையை நடத்திக் குடும்பத்தினை மகிழ்வினுள் ஆழ்த்தும் அருந்திறல் உனக்கன்றோ? பெண்ணே! நின் மக்களை நல்வழியில் அவர் கருத்தைச் செலுத்த முயல்வதுடன் வீரமென்ற ஒன்றை அதனுடன் இயைத்தெடுத்து உரைத்து வீரர்களாய் விளங்க வைக்கும் பெருமையும் உனக்கன்றோ? பெண்ணே! இல்லறமாம் நல்லறத்தில் "அன்பு" என்ற ஒன்றினாலே, அதை விளங்கவைக்கும் பெரும் பொறுப்பும் உன்னிடமே இருக்கிறதென்பதனை உணர்ந்து ஒழுகினால் அவ்வில்லறம், நல்லறமாய் விளங்கும் உரிமை பெற்றவள் நீயன்றோ? பெண்ணே! உன் இல்லிற்கு வரும் விருந்தினரை முகமலர்ந்து வரவேற்று அவர்கட்கு வேண்டுவன புரிந்து, அவர் தம்மை மகிழ வைத்தனுப்பும் மாண்பு, உன் கணவரைப் பெருமைப்படுத்தும் பொறுப்பு, உனக்கன்றோ? பெண்ணே! உனது இல்லறப் பண்பினைக் கண்டு, உன் கணவனின் பெற்றோரும், உடன்பிறந்தாரும். உற்றாரும் உன்னை இல்லத்துத் திருமகள் எனப் போற்றி உரைக்குந் தன்மையினைத் தன்னுட் கொண்டவளும் நீயன்றோ? பெண்ணே! உன் திறன் கண்டு, இல்லற வாழ்வினைக் கண்டு பிறர் நாண, நடத்திக்காட்டுந் திறனும் உனக்கன்றோ, பெண்ணே! தெருவெல்லாம் திரண்டெழுந்து வந்து, என்ன இவர்கள் இல்லில் கூக்குரல், கணவன், மனைவியை நையப் புடைக்கின்றனனே, அவளும் வேங்கையெனச் சீறுகின்றனளே, என்ற நகைப்பிற்கிடங்கொடாது, நன்னயம் கொண்டு நல்வாழ்வு வாழ்தலென்பதுவும், உன் கருத்தில் இடம்பெற்று, இல்லறத்தை நல்லறமாக இயக்கும் திறனும் உனக்கன்றோ? பெண்ணே! உன் கணவன் தீயவொழுக்கங்களில் ஆழ்ந்தவனாய் அமைந்து உன்னைப் பேணாது உன் அணிகலன்களெல்லாம் அகற்றி நையப் புடைத்தாலும், உன் குழவிகள் முகம் நோக்கி, அன்னவனைத் தெய்வமென நினைந்து, அவனுக்குரிய தொண்டினைச் செய்து, அகமகிழ்ந்து, ஆண்டவனை நோக்கி, என் குறை தீரெனக் கூப்பிய கரங்களும் அழுத கண்ணுமாய்ப், பொறுமையென்ற அணிகலனைக் கைக்கொண்டு வாழ்பவள் நீயன்றோ? பெண்ணே! கணவன் இறந்தவுடன் கைம்மைக்கோலம் பூண்டு அன்னவரை நினைந்துருகிக் கண்ணீருகுத்துக் கலங்கும் தன்மையைத் தலையாய கடனெனக்கொண்டு வாழ்பவள் நீயன்றோ? பெண்ணே! உன் மைந்தர்கள், அவர்தம் அருமைக் கிழத்தியர்பால் காதலென்ற புது மோகத்தில் மூழ்கி உன்னை வெறுத்தாலும், என் மக்க

ளெனத் தாயன்பு கொண்டொழுகும் தன்மை உன்னிடத்தியல்பிலே உறைந்ததென்னவெனப், பெண்ணாகிய உன்னையே, பெண்ணாகிய திருவரங்க நீலாம்பிகை வினவுகின்றேன். பெண்ணின் பெருமையே பெரிதென எடுத்துரைக்கும் சான்று நிரம்ப இருக்கின்றது. இருப்பினும் பெண்ணிடம் காணும் குறைகளை அடுத்து வெளியிட விரும்பித் திருவருளை வணங்கி எம்முறையில், பெண்ணினம். வாழ்ந்தால், பெண் பெருமை அழியாததொன்றாய் நின்றிலங்கும் என்பதனையும் இயைத்தே உரைப்பேன் இயக்கி. ஆண் மக்களுக்கும் இஃது ஓர் ஆறுதலளிக்கும் என்ற கருத்து மிணையந்ததே. தாய்க்குலமே! உலகம் போற்றும் உயர்ந்தோர்களை ஈன்றவள் நீயே என இறுதியில் எடுத்தியம்பி இத்துடன் முடித்துக்கொள்ள விரும்பி விடைபெறுகின்றேன்.

திரு. நீலாம்பிகை,
திருவரங்கம் பிள்ளை இல்லக்கிழத்தி,
காணாவுலகவாசி. (நெல்லை)

ஆங்கில நாள்,
8—10—59.

தோழி தந்த வாழ்வு

[திரு. மருதூர் இளங்கண்ணன், M. O. L.,]

மறைந்தனள் எனினும் மகிழ்வுகூர் பொழுதில்
எண்ணற் குரியள்மன் இன்னுயிர்த் தோழி ;
ஆளுநர்ப் பெறாஅ அணிதீஞ் சொல்போல்
தனித்தனிக் கிடந்தோம் ; நனிபல உதவிப்
புணர்த்தனள் பண்டுநற் புலவோர் போல ;
மாமழை பொழிந்துழி வான்போல் நெஞ்சத்து
மாசின்று அகல்பே ரன்புநன் குடைமையின்,
விறலுறப் புனைவோன் விழுமிய நெஞ்சினுட்
பாட்டியல் உணர்ச்சி பழுநிய பொழுதில்
தனிப்படு சொற்புணர் தகைமாண் பாட்டென
விளியா இன்பம் விளைக்குமன் வாழ்க்கை ;
அறம்,பே ரன்பிவை சிறந்தஎம் வாழ்வை
நயம்பொதி பாட்டின் நலன்வியந் தியம்பும்
தகைசால் நாவலர் போல்நனி
மாண்புறுத் துவர்நம் வயிறுவாய்த் தோரே.

தொல்காப்பியத்தில் ஓரறிவுயிர்

[திரு. மு. அரங்கராமாநுசம்]

தமிழரின் மொழிக் கருவூலம் தொல்காப்பியம். இக்காப்பியம் கலையையும், நாகரிகத்தையும், பண்பையும், அன்பையும், காதலையும், வீரத்தையும், தமிழரின் நிலையையும் அழகுற எடுத்துக் காட்டும் ஓவியம். தமிழ் மொழிக்குத் தலைமையாம் மணிமுடியாகத் திகழ்வதும், பொங்கு கடல்கொண்ட இலக்கிய இலக்கணங்களில் எஞ்சியதும் ஆகும். பண்டைத் தமிழரின் அகவாழ்வும் புற வாழ்வும் தகைவுறக் காட்டும் இத்தண்டமிழ் இலக்கணநூலில், அறிவியல் முத்துக்கள் அகப்படுவதை மூழ்கி முத்தெடுப்போர் காணலாம். தமிழரின், தமிழின் ஒப்பற்ற உயிர் நாடியாகவும் அமைந்துள்ளது இந்நூல்.

தொல்காப்பியர் தந்த முத்துக் குவியலில் அறிவியல் ஒளி வீசும் முத்துக்களைத் தொகுப்பின், புல் முதல் மக்கள் வரை உயிரினங்களை ஓரறிவுயிர் முதல் ஆறறிவு வரை காட்டியுள்ளார். ஓரறிவுயிர் எவ்வாற்றான் அறியும் என்பதையும், அதுபோல் மற்றைய, ஆறறிவுயிர்கள் அறியும் தன்மையையும் அழகுற நவின்றுள்ளார். அவற்றைக் கூறுமிடத்தும் தாமே இவ்வாறு பகுக்கவில்லை என்றும்; அறிவுமிக்க ஆன்றவிந் தடங்கிய கொள்கையுடைய சான்றோர் அவ்வாறு செய்தனர் என்றுங் கூறுகின்றார். அதனால் மூவா முதல் முத்தமிழின் அளப்பரும் புகழையும், பழைமையையும், நாம் ஒருவாற்றான் அறியமுடியும்.

> "ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
> இரண்டறிவதுவே அதனொடு நாவே
> மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
> நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
> ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
> ஆறறிவதுவே அவற்றொடு மனனே
> நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தனரே."

(தொல்-மர-உஅ)

இவ்வாறு கூறிய வகைகொண்டு, மக்கள் ஈறாக உள்ள உயிர்த் தொகுதிகளை அறிவின் அடிப்படையில் ஆறாகப் பிரித்துள்ளதை அறியலாம். மேல்,

> 'ஒன்றறி வதுவே உற்றறி வதுவே'

என உடம்பினால் அறியக்கூடியது எனத் தொல்காப்பியர் கூறி,

'புல்லும் மரனும் ஓரறி வினவே' (மரபு-௫௭உ)

என விளக்கினர். மரங்களைப் புல் எனவும் 'மரமெனவும் வகுத்தார். உற்றறிவது வெம்மை, தண்மை, வன்மை மென்மை இவற்றை உணர்ந்துகொள்ளும் தன்மையாம். இன்று மரவகையில் 'தூங்குமூஞ்சி' மரம் என்பது மாலையில் இலைகள் சுருங்கி வாடியதுபோல் காட்சி யளிக்கும் தன்மை காணலாம். இவ்வாறு காப்பியர் புல்லும் மரனும் என வகுத்தவைகளில்,

'புறக்கா ழனவே புல்லெனப் படுமே'
'அகக்கா ழனவே மரமெனப் படுமே'

என்று காழ் - வயிரிப்பு, அல்லது உறுதி, அல்லது வைரம் பாய்ந்தது என்று பொருள்படும் மேல் நல்ல உறுதியும் உள்ளே மரச்சோறும் கூடும் கொண்டுள்ளவைகளைப் புல்லென வகுத்தார். அவை தெங்கு, பனை, மூங்கில் போன்றவைகளாம். இவ்வாறு இல்லாது உள்ளும் புறனும் வயிர்ப்பு உடையவை மரங்களாம் பொதுவாக, புல்லொழிந்தன மரங்களாம்— "புறத்தும் அகத்தும் கொடி முதலாயின காழ்ப்பின்றியும் அகில் மரம் போல்வன இடையிடை பொய்ப்பட்டுப் புல்லும் மரனும் என வருவன உள" இவ்வாறு வேறுபாடு தோன்ற வரையறை கூறிப் போந்தார்.

தொல்காப்பியர் புல்லெனக் கூறியன, இன்று மக்கள் வழக்கிடை மூங்கில் மரம் தென்னை மரம் பனை மரம், என்றே கூறுகின்றனர். உள்வயிர்ப்பு உடையவை பலவகைகட்கும் மக்கட்குப் பயன்படும் மரங்களாகும். உள்ளும், புறனும் வயிர்ப்பின்றி உள்ளவைகள் வாழை, ஈந்து (ஈச்சை), கைதை (தாழை) மரம் என்றும் வழக்கிடை உள்ளன. தாமரை கழுநீர் முதலியனவும் இதன் கூறுபாட்டில் அடங்குவன ஆகும். இவ்வாறு புல்லும் மரனும் எனக் கூறுபடுத்தப்பட்ட, மரங்களின் உறுப்புக்களாக,

"தோடே மடலே ஓலை என்ரு
எடே இதழே பாளை என்ரு
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்." (மர-௬௪௧)

இவ்வாறு தம் முன்னோர் குறித்ததாகக் கூறும் தொல்காப்பியர் வழக்கு இன்றும் மாய்ந்து விடவில்லை. மக்களின் வாயில் தமிழ் மணம் அரும்புகளாக ஒவ்வொரு வகை மணத்துடன் கமழ்ந்து கொண்டிருக்கிறது. இன்றும் தென்னை மடல் பனையோலை, என்று வழங்குகின்றன. அவைபோல அகக்காழ் உள்ள மரங்கட்கும்,

“இலையே தளிரே மூறியே தோடே
சினையே குழையே பூவே அரும்பே
நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம்
மரனொடு வரூஉம் கிளவி யென்ப” (மர-௬௪௨)

என மரபு கூறினர். அம்மரபாக மாவிலை, மாந்தளிர், புன்னை இலை, மாங்குழை, மாஞ்சினை, மாம்பூ என்றும் வழங்குகின்றன. சிற்சில புல்லென்றது மரமென இன்றைய வழக்குலகில் வந்தது போல், சில சொற்கள் இலக்கியத்தில் பண்டுள்ளவை புகைப் படம்போல் காட்டுவனவும் உண்டு. இன்று வழக்கிடைச் சில இல்லை, ஆனால் அவற்றை இலக்கணக் கண்கொண்டு நோக்கின் வழுவேயாம். இவ்விரு புல்லும் மரனும் கொண்டுள்ள,

“காயே பழமே தோலே செதிளே
வீழோ டென்றாங் கவையும் அன்ன.” (மர-௬௩௪)

இச் சொற்களை உடைய பெயர்களில் இன்று வழக்கிடை, தேங்காய், பனம்பழம், வாழைத் தோல், மாஞ்செதில் என வழங் கப்படுகின்றன. காய் பழம் என வேறுவேறு கூறினும் புல்லி னத்தின் ஒரு கூறாகிய பனையை, பனம்பழம், பனங்காய் என்று வருவதுபோல தென்னையின் காய் தேங்காய் என்றே வழங்கு கிறார்கள்.

இவ்வாறு இயற்கையோடு ஒன்றி இல்வாழ்வு நடாத்தி அதற்கு இலக்கியமும் இலக்கணமும் கண்ட தமிழன், அறிவின் திறமை கொண்டு, மக்களின் பண்பு வாழ்க்கையை அடிப்படை யாகக் கொண்டு யாத்த பொற்கோயில் தொல்காப்பியம். இடு குறியாகவும் காரணமாகவும் மரபாகவும் வழங்கிய பெயர்கள் பல உள்ளன. தொல்காப்பியர் காலத்தில் இருந்த மரங்கள் இனம் இன்றும் வாழ்கின்றன. ஆனால் அவற்றின் பெயர்கள், தமிழரின் முன்னோர் இறந்தபிறகும் அவர்தம் கிளைஞரின் வாழ்க்கை கிளைக்க முன்னோர் பெயர் மறந்ததுபோல், அன்று அப்பெயரால் அழைக் கப்பட்ட மரங்கள் இன்று வழக்கில் மாறுபட்டிருக்கின்றன. பண்டு திருமறைக்காடு என்பது வேதாரணியம் என்றும், (மயில் ஆடும் துறை) மயிலாடுதுறை என்பது மயூரம் என்றும் இன்று மாறியதுபோல், சொல் மாறியிருக்கலாம். அவ்வாறு காப்பியர் கூறும் ஓரறிவுயிர்கள் என்று சொல்லப்படுகின்ற மரங்களில்,

“யாமரக் கிளவியும் பிடாவுந் தளவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே.” (எழுத்-௨௩௦)

இம் மரங்கள் சில இடங்களில் வழக்கில் இருப்பனவாகத் தெரிகின்றன. இலக்கியத்தில் அன்றுபோல் இன்றும் உள்ளன.

'கருங்கால் யாத்துப் பருந்து வந்து இறக்கும்.' (அகம் ருகஎ)

"சேயின் வரூஉம் மதவலி! யாஉயர்ந்து
ஓமை நீடிய கான் இடை அத்தம்." (நற்-ககஅ)

'கருங்கால் யாத்து வரிநிழல் இரீஇ.' (ஐங்-ருஅஅ)

'சிறுகரும் பிடவின் வெண்தலைக் குறும்புதல்.' (அகம்-ருச)

'வண்டு வாய்திறப்ப விண்ட பிடவம்.' (நற்-உருஅ)

'பொலன் அணி கொன்றையும் பிடவமும் உடைத்தே.' (ஐங்-சருகு)

"படுமழை பொழிந்த பாறை மருங்கில்
சிரல்வாய் உற்ற தளவின்." (நற்-சுக)

'புதல் இவர் தளவம் பூங்கொடி அவிழ.' (நற்-உசஉ)

'யாவிரி நிழல் துஞ்சும்.' (குறுந்-உருகு)

'பூ அமல் தளவமொடு.' (குறுந்-ருஅஉ)

யாமரம் பாலை நிலங்களிலும் காணப்படும் என்பதும், பிடவு வெண்மலர் பூக்கும் என்பதும், தளவம் கொடி யென்பதும், யாமரக் கிளைகள் கருமையாய் இருக்கும் என்பதும், தலைவிக்குத் தலைவன் முல்லையொடு தளவமும் சூட்ட வருவான் எனத் தோழி கூறுவதால் இது விரும்பக்கூடிய பூக்களில் ஒன்று என்பதும் அறியலாம்.

'மாமரக் கிளவியும் ஆவும் மாவும்.' (எழுத்-உருஉ)

மாமரம் என்றே இன்றும் வழக்காற்றில் உள்ளது. மாவின் தளிர், மாவடு இவைகள் இலக்கியத்தில் உவமையாக உடலழகிற்கும் கண்ணிற்கும் எடுத்தாளப்படுகின்றன.

'நன்னன்-நறுமா கொன்று நாட்டில் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல.' (குறு-எரு)

'எவ்வத்து ஒவ்வா மாமுதல் தடிந்து.' (பரி-உக)

'அலங்குசினை மாஅத்து அணிமயில் இருக்கும்.' (ஐங்-அ)

'தேம்பாய் மாஅத்து ஓங்குசினை விளிக்கும்.' (அகம்-ருசக)

இவ்வாறு இலக்கியத்தில் வழக்கில் பயின்றுவரும் மாமர இலையைக் குயில் விரும்பி உண்ணும். கார் காலத்தும் சில பூத்துக் காய்க்கும். பெரும்பான்மை வேனிற் காலத்திலே பூத்துக் காய்க்கும். இம்மரம் பலவகையாக இன்றே வழக்கில் காணப் படுகின்றன.

'உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே'

இம்மரம் உதி யென்பது இக்காலை ஒதி, அதாவது ஒதிய மரம் என்று வழங்கப்படுகிறது. (இதன்கோடு மணநாளில் நடப் படுகிறது) இது பலகை, நுகத்தடி முதலியன செய்யப் பயன் படுகிறது.

'புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை.' (எழுத்-உ௪௫)

சுவை யொன்றின்கூறு புளி; அதனால் ஈண்டு சுவைப்புளி யைக் கூறவில்லை. மரமான புளிய மரத்தைக் கூறுகிறார்.

'எகின் மரமாயின் ஆண்மர இயற்றே.' (எழுத்-ந௩௭)

எகின் என்பது அன்னத்தையும் குறிக்கும் சொல், அதனால் மரமாயின் என்று விதந்து கூறினர். அவ்வாறாயின் இன்று மக்கள் எகின் என்று வழங்குவதில்லை. புளியமரம் என்றே குறிப்பிடுகின்றனர்.

'களரிப் புளியின் காய்பசி பெயர்ப்ப.' (நற்-ந௭௪)

'இன்புளிக் கலந்து மாமோர் ஆக.' (மலை-க௭௬)

உதிமரம்போல அதிகமாக இலக்கியத்தில் பயின்று வரவில்லை.

'ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே.' (எழுத்-உ௬௩)

'சேயென் மரப்பெயர் ஒடுமர இயற்றே.' (எழுத்-உ௭௬)

ஒடுவங்காடு என்றும் உள்ளது, சேய் என்பது மூங்கில்.

'செயலைஅம் தளிரேய்க்கும் எழில்நலம்.' (கலி-க௪)

"விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்
அவைமுப் பெயருஞ் சேமர இயல." (எழுத்-உ௬௩)

விசை, ஞெமை, நமை இலக்கியத்தில் காணப்படுகின்றன. வழக்கில் சிறுபான்மை வருகின்றன.

'அலந்தலை ஞெமையத்து இருந்த குடிஞை.' (நற்-ந௬௪)

'நுண்ணிதின் நிவக்கும் வெண்ஞெமை வியன்காட்டு."
(அகம்-க௪௫)

விசை, ஞெமை இருப்பனவாகத் தெரியவில்லை.

"பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங்காலை அம்மொடு சிவணும்." (எழுத்-உ௮௪)

பனை, பெண்ணை, போந்தை ஒருபொருள் குறித்தன. இவை பனை யென வழக்கில் உள்ளமை அறியத்தக்கது. பெண்ணை போந்தை என்பன இலக்கியத்தில் பயின்று வரும் சொற்களாம். அரை அரசமரம் என இன்று வழக்கில் உள்ள மரமாக இருக்க

லாம். வழக்காற்றில் அரை பிறகு அரைசு, அரசாக மாறியிருக்க லாம். ஆவிரை என்பது மணந்தரும் மரமாக இருக்கலாம். விரை என்பது மணத்தைக் குறிப்பதும் ஆகும்.

'பனைத்தலைக் கருக்குடை நெடுமடல் குருத்தொடு மாய.' (குறுந்-௩௭௨)

'குருகு பறியா நீள்இரும் பனைமிசை.' (பரி-௨)

'நாரையொடு பனைமிசை
அன்றில் சேக்கும் முன்றில் என.' (அகம்-௩௬0)

'வேனில் அரையத்து இலைஒலி வெரீஇ.' (ஐங்-௩௨௫)

'பொன்னேர் ஆவிரைப் புதுமலர் மிடைந்த.' (குறுந்-௧௭௩)

'பூளை பொலமலர் ஆவிரை - வேய்வென்ற.' (கலி-௧௩௮)

ஆவிரை, ஆவாரை ஆவாரம்பூ என்று வழக்கில் உள்ளமை யும் அறியத்தக்கது.

'ஆண்மரக் கிளவி அரை மரஇயற்றே.' (எழுத்-௩0௫)

'வரிஅரி ஆணுமுகிழ வரிசினைய
மாந்தீம் தளிரொடு வாழைஇலை மயக்கி.' (பரி-௧0)

'இல்ல மரப்பெயர் ஆண்மர இயற்றே.' (எழுத்-௩௧௪)

ஆண் என்பது எந்த மரம் எங்கு வழக்கில் உள்ளது என் பதும் தெரியவில்லை.

(தொடரும்)

உறக்கத்தின் பொருள் என்ன ?

[கூடலூர், பெரு. இராமச்சந்திரன்]

தமிழைப் பழிக்கும் சில்லோரைச்
சாடும் திறல்நாம் பெற்றிலமோ ?
தமிழை வளர்க்கும் எண்ணம்நாம்
சற்றும் மனதில் கொண்டிலமோ ?
தமிழைப் போற்றி வணங்கிடும்நற்
றமிழர் பண்பை இழந்தனமோ ?
தமிழை 'மந்தி' அழிக்கையிலே
தமிழர் தூங்கின் பொருளென்ன ?

கவைமகன்

[திரு. பி. எல். சாமி, பி. எஸ்ஸி.]

பழந்தமிழிலக்கியத்தில் அரிதாகக் காணப்படும் செய்திகள் பல. அவற்றில் குறுந்தொகையில் வரும் கவைமகன் பற்றிய செய்தி மிக அரிய செய்தியாகும். உரையாசிரியர்களும், பிற்காலப் புலவர்களும் இச் செய்தியைப் பற்றித் தெளிவான, பொருத்தமான விளக்கம் தரவில்லை.

'அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது' என்று சொல்வர். ஆனால் அந்த அரிய மானிடப் பிறப்பிலும் குறை தோன்றிவிடுவதுண்டு. அத்தகைய குறைகளை எண்பேரெச்சமென்று பழந்தமிழர் வகைப்படுத்தினர். 'சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும் கூனுங்குறளும், ஊமும் செவிடும் மாவும் மருளும்' என்று எண்வகைக் குறைப்பிறப்புகளை எண்பேரெச்ச மென்று புறநானூறு கூறும். இந்த எண்வகைப் பிறப்புகளில் எளிதாகக் காணப்படுவன செவிடும் ஊமும் கூனுங் குறளுமாகும் சிறப்பில் சிதடு என்பது அறிவு குறைந்து மூளை சிறியதாய்ப் பிறக்கும் பிறப்பு. சிதட்டுக்காய்போல் தலையில் உள்ளீடு இல்லாத பிறப்பு. துஞ்சிய புலி இடறிய சிதடன் சங்கநூலில் வருபவன். இத்தகைய பிறப்பை ஆங்கிலத்தில் 'Cretin' என்பர். கண், மூக்கு முதலிய உறுப்புகள் இல்லாமல் பிறக்கும் மணைக்கட்டைப் பிறவியை உறுப்பில் பிண்டம் என்றனர். 'குழவி யிறப்பினும் ஊன்றடி பிறப்பினும்' என்னும் புறத்தில் 'ஊன்தடி' என்று இஃது அழைக்கப்படுகின்றது. 'Paper thin mummy' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும். இவைகளை விட மிகவும் அரிதான பிறவிகள் மாவும் மருளும் 'கையில் ஊமனும்,' 'கூனுங் குறளும்' குறுந்தொகையிலும் கலித்தொகையிலும் வருகின்றார்கள். மானிடப் பிறப்பில் எத்தனை குறையுண்டோ அத்தனையும் பழந்தமிழர் அறிந்திருந்தவையே என்று தெரிகின்றது.

பழந்தமிழர் குறைப்பிறப்புகளை மட்டுமன்றி மிகமிக அரிதாக நிகழ்ந்த வியப்புக்குரிய பிறப்புச் செய்திகளையும் அறிந்திருந்தனர் என்பது 'கவைமகன்' செய்தியிலிருந்து உணருகிறோம். இரட்டைப் பிறவியைப் பற்றியும் தமிழர் சில கருத்துக்களைக் கொண்டிருந்தனர். தொல்காப்பியத்தில், 'இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா' என்ற சூத்திரத்தை விளக்க வந்த சேனாவரையர் 'ஈண்டிரட்டைக் கிளவியென்றது மக்களிரட்டை, விலங்கிரட்டைபோல வேற்றுமையுடையனவற்றையன்றி, இலையிரட்டையும் பூவிரட்டையும்போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையனவற்றை யென்றுணர்க' என்று கூறு

கிறார். மக்களிரட்டையில் வேற்றுமையுண்டு; அதுபோல் விலங்கிரட்டையும். இதனால் இரட்டைப் பிறவியாய்ப் பிறக்கும் மக்கள் வேற்றுமையுடனிருப்பர் என்பது சேனாவரையர் கருத்து. இயற்கையில் பெரும்பாலும் இரட்டைப் பிறவிகள் வேற்றுமையாகவே இருப்பர். ஒரே பிறப்பில் பிறக்கும் இருகுழந்தைகள் ஆணாகவும் பெண்ணாகவும், அல்லது அடையாளங்கள் மாறுபட்ட இரு ஆண்களாகவோ பெண்களாகவோ பிறப்பதுண்டு. இவ்விரட்டையை "உடன் பிறப்பிரட்டைகள் (Fraternal twins) என்று கூறுவர். ஒருதாய்க்குப் பலமுறை பிறந்த பிள்ளைகள் போலவே இவ்விரட்டையரும் வேற்றுமையோடிருப்பர்.

இலையிரட்டை என்பது தனித்தனியாகக் காணப்படும் இரண்டு இலைகளைக் குறிக்காது. ஆனால் தென்னை, புளியன், வேம்பு முதலிய மரங்களின் கூட்டிலைகளில் காணப்படும் இரட்டை இலைகளையே (Bipinnate) குறிக்குமென்று கருதுகிறேன். இவ்விலைகள் தாம் ஒற்றுமையுடையனவாகவும், எதிரெதிராக இருப்பதால் வேற்றுமையுடையனவாகவும் உள்ளன. இத்தகைய கூட்டிலைகளைச் செடி நூற்படி ஓரிலையாகவே கருதுவர். ஓரிலையே பிரிந்து இரண்டாகியதென்று கருதலாம். இவ்விலைகளை இரண்டு வேறு வேறு இலைகளாகக் கருதுவதில்லை ஓர் இலையிற் பிறந்த இரட்டை இலையாகவே கருதுவர். இதைக் கண்டுபிடிக்கச் செடி நூற்படி சில காரணங்கள் கூறுவர். ஆதலின், இரட்டைக்கிளவிக்கு இலையிரட்டையை உவமித்துக் கூறியது மிகவும் பொருத்தம்; நுட்பமான திட்பமான உவமானம். கூட்டிலை போலவே கூட்டுப்பூவும் உண்டு. நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரையிலும் 'மக்களிரட்டையாய் மாறினம் பிறந்தியாம்' என்று வரும் மேற்கோள் செய்யுள்வரி மக்களிரட்டை மாறி யிருக்குமென்று பழந்தமிழர் கருதியதைக் காட்டுகின்றது. இது பெரும்பாலும் நிகழும் செய்தியை அடிப்படையாகக் கொண்டெழுந்த கருத்து. இக் கருத்துக்கு எதிர்மாறாக மக்களிரட்டை ஒற்றுமையாகப் பிறப்பதுமுண்டு. இவைகளை ஒற்றுமையிரட்டைகளென்று (Identical twins) கூறுவர். தாயின் கருப்பையிலிருக்கும் ஒரு முட்டை கருவுற்று இருபகுதியாகப் பிரிந்து வளர்ந்து உருவும் அதன் நிழலும்போல் ஒற்றுமையாக இருக்கும். வேற்றுமையுடைய உடன்பிறப் பிரட்டைகள் தாயின் கருப்பையிலிருந்து ஒரே சமயத்தில் இருமுட்டைகள் கருவுற்று வளர்வதால் பிறப்பவை. இவை இருமுட்டைகளிலிருந்து தோன்றுவதால் வேற்றுமையுடையன. ஒற்றுமை யிரட்டைகள் ஒரே அடையாளங்களுடன் இருப்பதுமின்றி, ஒரே உணர்ச்சியுடையனவாக இருக்கும். ஆனால் பழந்தமிழர் பெரும்பாலும் வேற்றுமை யிரட்டைகளையே கண்டதால் இரட்டைக் கிளவிக்கு மக்களிரட்

டையை உவமையாகக் கூறாமல் இலையிரட்டையை உவமையாகக் கூறினர். இலையிரட்டை உருவும், கண்ணாடியில் காணும் எதிர் உருவும் (Image)போல் ஒற்றுமை மிகுந்து இருக்கிறது. அது போன்றே இரட்டைக் கிளவியும் சொல்லுக்குச்சொல் யாதொரு வேற்றுமையின்றி இருக்கிறது. உருவின்றேல் எதிர் உரு இல்லை. இரட்டைக் கிளவியில் ஒருசொல்லைப் பிரித்து எடுத்துவிட்டால் இரண்டாவது சொல்லுக்குப் பொருளில்லை. ஒலியின்றேல் எதிர் ஒலி ஏது? ஆனல் அடுக்குச்சொல் இரட்டைக் கிளவிபோ லின்றி பிரிந்திசைக்கும்; மற்றும் சொல்லடுத்து வரும்போது மிகுதியை யுணர்த்தும். இரட்டைக் கிளவியோ உருவும் ஆடியிற் காணும் அதன் நிழலும்போல் யாதொரு மாற்றமுமின்றி, பொருளில் ஆக்கமும் கேடுமின்றி இரட்டையாக வரும்போது மட்டும் பொருள்தந்து உருபிரிந்தால் நிழல் அழிவதுபோல், பிரிக்கும்போது பொருளிழந்து விடுகின்றது.

*இரட்டைப் பிள்ளைப்பேறு எண்பத்தாறு தடவைகளுக்கு ஒருமுறையாக மக்களினத்தில் நிகழ்வதாக அறிவியற்படி கணக்கிட்டிருக்கின்றார்கள். அதிலும் ஒற்றுமை யிரட்டை மிக அரிதாகவே பிறக்கின்றன. ஆனல் மிக மிக அரிதாக, தாயின் கருவில் வளரும் ஒரு முட்டையின் பிரிந்த இருபகுதிகள் முற்றிலும் பிரியாமல் ஒட்டிக்கொண்டே பிறப்பதுண்டு. இத்தகைய ஒட்டிய ஒற்றுமை யிரட்டை ஏறக்குறையப் பத்து இலக்கத்திற்கு ஒரு தடவை நிகழ்வதாகக்கூறுகின்றனர். இந்த இரட்டைப் பிள்ளைகள் மார்ப்பகுதியிலோ முதுகிலேயோ ஒட்டிக்கொண்டு பிறப்பதுண்டு. இந்த இரட்டைப் பிறவியைச் சீயத்து இரட்டை (Siamese twins) என்றழைப்பர். குறுந்தொகையில் வரும் கவைமகன் என்பது இத்தகைய ஒட்டிப்பிறக்கும் இரட்டைப் பிறவியே என்பதை நுண்ணிதினுய்ந்தால் தெளிந்து கொள்ளலாம்.

"கொடுங்கால் முதலைக் கோள்வல் ஏற்றை
வழிவழக்கு அறுக்கும் கானலம் பெருந்துறை
இனமீன் இருங்கழி நீந்தி, நீநின்
நயனுடை மையின் வருதி இவள்தன்
மடனுடை மையின் உயங்கும் யான்அது
கவைமக நஞ்சுண் டாஅங்கு
அஞ்சுவல் பெரும! என் நெஞ்சத்தானே."

என்ற குறுந்தொகை ௩௨௪ ஆம் பாட்டில் 'கவைமகன் நஞ்சுண் டாங்கு' என்ற வரிக்குப் பொருத்தமாக உரை கூறப்படவில்லை.

* மாந்தரினத்தில் எண்பத்தாறு வெவ்வேறு பிள்ளைப் பேற்றுக் கொருமுறை இரட்டைப் பிள்ளையும், முப்பிள்ளைகள் 7396-க் கொருமுறையும், நான்கு பிள்ளைகள் 635956-க் கொருமுறையும், ஒட்டிய விரட்டைப் பிள்ளை பத்திலக்கத்திற் கொருமுறையுமாகப் பிறக்கும்.

இரட்டைக் குழந்தைகளையுடைய தாய் இருகுழந்தைகளும் நஞ்சுண்டால் எதை முதலில் கவனிப்பது என்ற துயரநிலையை உவமையாக்கி யிருப்பதாகக் கூறுவர். ஆனால் 'கவைமகன்' என்ற சொற்கு இவ்வுரை பொருத்தமான விளக்கம் கூறவில்லை. இப்பாட்டில் 'கவைமகன்' என்ற சொல் மிக இன்றியமையாத சொல். இருகுழந்தைகளும் ஒரே சமயம் நஞ்சுண்பது நம்பக் கூடியதாக இல்லை. மற்றும் உடனுக்குடன் இரு குழந்தைகளுக்கும் மருந்து தருவது எளிதில் செய்யக்கூடியதாகும். தலைவனும் தலைவியும் கவைமகவு போன்றவர்கள். 'இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்' என்று சொல்லும்படி அவ்வளவு அன்புடையவர்கள். தோழி தாய் போன்றவள். கவைமகவில் ஒன்று நஞ்சுண்டால் உடனே மறுமகவும் நஞ்சின் கொடுமையை உணர்கின்றது. கவைமகவில் இரண்டும் ஒட்டிக்கொண்டு பிறப்பதால் உடனே உடனே ஒருமகவுண்ட நஞ்சு மறுமகவையும் வருத்துகிறது. அதுபோலவே, தலைமகனுக்கு வருந்துன்பம் உடனே தலைவியையும் தலைவிக்கு வருந்துன்பம் தலைவனையும் உடனே வருத்துகிறது. மடனுடைமையின் உயங்கும் என்று தலைவனைத் தடுத்தால் தலைவன் வருந்துவான். அவன் துன்பம் தலைவியையும் வருத்தும். தலைவன் நயனுடைமையின் வந்தாலோ அலர் எழுவே தலைவி வருந்துவாள். தலைவனும் அதனால் வருந்துவான். எப்படிப் பார்க்கினும் இருவரில் ஒருவருக்குத் துன்பமுண்டாகும். அத்துன்பமே உடனே இருவரையும் வருத்தப்படுத்தும். ஆதலால் தோழி கவைமகவு நஞ்சுண்டதினால் வருந்தும் தாய்போல் வருந்துகிறாள். வாரேல் என்றால் தலைவனுக்கு அது நஞ்சு. வருக என்று விட்டால் அது தலைவிக்கு நஞ்சு. இதுவே பொருத்தமான விளக்கமாகும். சங்க நூல்களில் 'கவை' என்ற சொல்லாட்சியினை நன்றாக உணர்ந்தவர்கள் இதற்கு வெறுமனே இரட்டை என்ற பொருள் மட்டும் கொண்டிரார். "கவைமுறி யாஅத்து நாஞரை மருங்கின்." (அகம்-௨௫௭) "கவையிலை யாரினங்குழை கறிக்கும்." (அகம் - ௧௦௪) "கவைமுட் கள்ளிப் பொரியரைப் பொருந்தி." (புறம்-௩௨௨) என்ற சங்கநூற் பாடல் வரிகளில் 'கவை' என்ற சொல்லாட்சி இதை வலியுறுத்தும். ஆத்தியின் இலை ஒன்றாகத் தொடங்கி பின்னர் இரண்டாகப் பிரிகிறது. பாதி ஒன்றியும் பாதிபிரிந்தும் காணப்படுவதாலே 'கவையிலை ஆர்' என்று அழைக்கப்படுகிறது. ஆதலால் 'கவைமகன்' என்ற சொல்லும் ஒன்றிய இரட்டைப் பிறவியையே குறிக்கும். இத்தகைய மிக அரிய செய்தியை அழகிய பொருத்தமான உவமையாகக் கையாண்டதால் பாடிய புலவர் கவைமகனார் என்றழைக்கப்பட்டார். 'கவைமகன்' எனச் சொல்லே அவருக்குப் பெயருமாயிற்று.

நக்கீரர்*

[திரு. சோ. ந. கந்தசாமி, பி.ஏ. (ஆனர்சு)]

கடந்த நூற்றாண்டின் முக்காற்பகுதிகாறும் நக்கீரர் நாவீறு படைத்த பாவலருள் ஒருவராகவே கருதப்பட்டார். நாற்பதாண்டுகட்கு முன்னர் நாட்டார் ஐயா அவர்கள் நக்கீரரைப் பற்றி முதன்மையாக ஆய்ந்தறிந்து தமது விழுமிய கருத்தைக் கி. பி. 1919 இல் நூல்வடிவில் காட்டினார்கள். அஞ்ஞான்றே நக்கீரர் இருவராதல் வேண்டும் என்னும் கருத்து எழுச்சியுற்று இலங்குவதாயிற்று. அவ் விருவரையும் ஒருவராக்கிக் காட்ட நாட்டார் ஐயா அவர்கள் வேட்டார்கள். பின், முற்றக்கற்றார் முதலாகக் கற்றுச் சொல்லிகள் ஈறாகத் தாம்தாம் கண்ட கருத்தே தக்கதெனப் பன்னாட்கள் போந்தன. காலம் கறங்கெனச் சுழறலும் கருத்துச் சகடெனத் திறம்புதலும் கண்கூடு. †கி. பி. 1940 இல் பேராசிரியர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் நக்கீரர் இருவராவர் என்னுங் கோட்பாட்டைச் சொல் மரபுகள் சிலவற்றின் துணைகொண்டு நிறுவினர். கி.பி. 1943இல் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் நக்கீரர் நால்வராவர் என்னுங் கருத்தை வெளியிட்டனர். கி. பி. 1952 இல் பேராசிரியர் பிள்ளை அவர்களே நக்கீரர் நால்வரல்லர் மூவரே என்று மொழிந்தனர்; ஒருவர் மறைவிற்கு ஒரு காரணமும் கூறிற்றிலர். கி. பி. 1955 இல் பேராசிரியர் மா. இராசமாணிக்கம் பிள்ளையவர்கள் "செந்தமிழ்" அக்டோபர் இதழில் "நக்கீரர்" என்னும் கட்டுரை வெளியிட்டனர். நக்கீரனாரின் பெயர் பொறிக்கப்பெற்ற நூல்களும் பாக்களும் யாத்த புலவர் ஒருவரே என்னும் பொருளுற எழுதிச்செல்கின்றார். காரணகாரியத் தொடர்பின்றி இயங்கும் இக் கட்டுரையினைப் பற்றி ஈண்டு எழுதுவதற்கு நான் துணியவில்லை.

இக் கட்டுரையின் நோக்கம்: நெடுநல்வாடை எழுதிய நக்கீரரும் திருமுருகாற்றுப்படை எழுதிய நக்கீரரும் ஒருவரா என்பதைக் காண்பதாம். இவ் விரு நூல்களையும் இருவேறு நக்கீரர்கள் எழுதினார்கள் என்னும் திரு. வையாபுரிப் பிள்ளை

---

* பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் 15-2-1956 இல் ஆனர்சு சிறப்புக் கழகத்தில் (Honours club) கட்டுரையாளரால் படிக்கப்பெற்ற கட்டுரை.

† 1940 இல் திருப்பதியில் நடந்த கீழ்த்திசைக் கலை மாநாட்டில் டாக்டர் அ. சி. அவர்கள் படித்த "நக்கீரர்-சொல்" (The language of Nakkirar) என்ற கட்டுரை காண்க.

அவர்கள் கட்டுரையின் வன்மை மென்மைகளை நோக்கு முகத்தான் எனது உள்ளக்கிடக்கையை உணர்த்தற்குத் துணி கின்றேன்.

நக்கீரர் யாத்தனவாகக் கிடைப்பன: குறுந்தொகையில் எட்டுப் பாக்களும், நற்றிணையில் ஏழும், அகநானூற்றில் பதினேழும், புறநானூற்றில் மூன்றும், பத்துப்பாட்டில் இரண்டும், களவியல் உரையும். அடிநூலும், நக்கீரர் நாலடி நானூற்று வண்ணமும், 11 ஆம் திருமுறையில் ஒன்பது நூல் களும் பிறவுமாம். இவற்றை ஆய்ந்த பிள்ளை அவர்கள் நக்கீரரைப் பற்றித் தம் முடிபைக் கீழ்க்காணுமாறு காட்டுகின்றார்:

நக்கீரர்	காலம்	நூல்கள்	சமயம்
1. சங்ககால நக்கீரர்	கி. பி. 250	நெடுநல்வாடை தொகை நூல் பாக்கள்	?
2. முருகு நக்கீரர்	கி. பி. 450	திருமுருகாற்றுப்படை	சைவம்
3. இலக்கண நக்கீரர்	கி. பி. 650	அடிநூல், களவியல் உரை, நாலடி நானூறு	சைவம்

திரு பிள்ளை அவர்களின் ஆராய்ச்சி உலகத்தில் ஏற்றத் தாழ்வின்றி இருநூறு ஆண்டுகட்கு ஒருமுறையாக நக்கீரர் நால்வரும் பிறக்கின்றனர்! சங்க நக்கீரர் கி. பி. 3 ஆம் நூற் றாண்டினர் என்னற்கு அவர்கள் கூறும் விளக்கம் இதுவாம்:

"விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு
ஒருதிறஞ் சாரா அரைநாள் அமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎம் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்தனர்."
(நெடுநல்: எ௩-அ)

"கருவொடு பெயரிய காண்பின் நல்இல்." (நெடுநல்: ககச)

"புதுவ தியன்ற மெழுகுசெய் பட்மிசைத்
திண்ணிலை மருப்பின் ஆடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
உரோகிணி." (நெடுநல்: கடுகூ-௬௩)

"மேற்காட்டிய அடிகளிலே மனையமைப்பிற்கு உரிய வட மொழிப் பெயர்க்குறிப்புக்கள் வந்துள்ளன. மேஷராசியில் இருந்து தொடங்கிப் பன்னிரு ராசிகளிலும் சூரியன் செல்

கின்றமை குறிக்கப்பட்டிருக்கின்றது. உரோகிணி நட்சத்திரம் கூறப்பட்டுள்ளது. கிரேக்கர்களிடமிருந்து ராசியைப்பற்றிய அறிவு சுமார் கி. பி. 200 இல் தமிழ்நாட்டில் புகுந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இதற்கேற்ப, யவனரும் நக்கீரரால் குறிப்பிடப்படுகின்றனர். எனவே, சுமார் கி. பி. 250 இல் நக்கீரரால் நெடுநல்வாடை இயற்றப்பட்டிருக்கலாம். கபிலர், பாரி, கரிகாலன் முதலியோர்கள் எல்லாம் இந் நக்கீர ருக்கு ஒரு நூற்றாண்டிற்கு முற்பட்டவராகலாம். மதுரைக் கணக்காயனர் மகனர் இவராக இருக்கலாம். சங்ககாலப் புலவர் இவரேயாதல் வேண்டும்.''

இனி, நெடுநல்வாடையில் மனையமைப்பிற்குரிய வட மொழிப் பெயர்க்குறிப்புக்கள் வந்துள்ளனவாகக் கூறுதலான், தமிழர்கள் இராசியைப் பற்றிய அறிவை வடவர்களிடமிருந்து பெற்றனர் என்று இயம்பியிருப்பின் ஒரளவேனும் ஒவ்வலாம். ஆயின், ''கிரேக்கர்களிடமிருந்து ராசியைப்பற்றிய அறிவு சுமார் கி. பி. 200இல் தமிழ்நாட்டில் புகுந்திருக்கலாம் என்று ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர்'' என்னும் ஐயம் நிறைந்த ஆய்வாளர்தம் கருத்தைக்கொண்டு ஒரு முடிபிற்கு வருதல் உகந்ததா? யவன ரிடம் தமிழர் கோள்நிலைப் புலமை எய்தினர் என்னற்கு ஏற்ற சான்றுகள் சாற்றி வலியுறுக்காமல் ''வடமொழிக் குறிப்புக்கள் வந்துள்ளன'' என்னும் வேண்டா கூறல் கடம்பூருக்குச் செல்ல வழிகடாயினர்க்கு இடம்பூண்ட மேதி எழில்கடா ஈன்றதென்னு மாற்றை ஒக்கும். இனி, உரோகிணியைக் குறிக்கும் ''சகடு'' என்னும் தமிழ்ச்சொல் அகநானூறு 136ஆம் பாவில் வருதல் அறிதல் வேண்டும். யவனர் நெடுநல்வாடையில் குறிப்பிடப் பெறுதலான் கோள்நிலை அறிவு அவரிடமிருந்து தமிழர் கற்றுக் கொண்டனர் என்னும் குறிப்புத் தோன்றப், பிள்ளை அவர்கள் எழுதுகின்றனர். இவர்தம் கருத்துப்படியே கி. பி. 2ஆம் நூற் றாண்டில் தோன்றிய பெரும்பாணாற்றுப் படையில்,

> ''யவனர் ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட.'' (௩௧௬-௧௭)

> ''மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
> வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்.''
> (முல்லைப் பாட்டு: ௬0-௬௧)

> ''யவனர் தந்த வினைமாண் நன்கலம்.'' (அகம்: ௧௪௯)

என்று யவனர் குறிப்பிடப்பெறுகின்றனர். தமிழர்கள் யவனர் நாட்டிற் செய்த பண்டங்களையே கொண்டனர் என்னும் செய்தி யன்றி, அவரிடம் கோள்நூல் புலமைகொண்ட திறத்தைச் சங்கப் பனுவல்கள் சாற்றுவனவல்ல.

இனி, பிள்ளை அவர்கள் கூற்றுப்படியே இராசி பற்றிய அறிவை கி. பி. 200இல் தமிழர்கள் அறிந்தனர் என்றே கொள் வோம்.* ஆயின், அவர் கொள்கைப்படியே கி பி. 150-ல் வாழ்ந்த கபிலர்,

"மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி ஓடினும்
வயலகம் நிறைய." (புறம்: ககஎ)

என்ற புறப்பாவில் கோள்நிலைக் குறிப்புக்கள் இருத்தலை எண் ணுங்கால் கி. பி. 200இல் கோள்நிலைப் புலமையினை யவனரிடம் தமிழர் கற்றுக்கொண்டனர் என்னும் கருத்துப் பொருத்தமற்ற தெனப் புலனாகும். கபிலர் காலத்தவராகிய ஆவூர் மூலங்கிழார்,

"ஆடியல் அழற்குட்டத்து
ஆரிருள் அரையிரவில்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காயப்
பங்குனியுயர் அழுவத்துத்
தலைநாண்மீன் நிலைதிரிய
நிலைநாண்மீன் துறைபடிய......
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பினானே." (புறம் உ௨௯)

எனப் புறநானூற்றில் புகன்றிருப்பதைப் பொறுமையாகப் பயின்று பார்த்தால் தமிழர் இராசிகளைப் பற்றியும், கோள்நிலை பற்றியும் கி. பி. 200-க்கு முன்னரே தெரிந்திருந்தனர் என்பது புலனாம். இங்குக் காட்டிய பகுதிகளில் ஆடு, அழற்குட்டம், முடப்பனை, குளம், நாண்மீன், மைம்மீன், வெள்ளி முதலிய சொற்கள் தனித்தமிழ்ச் சொற்கள் என்பது அவர்களுக்கே தெரியும்! கோள்மீன்களும் நாள்மீன்களும் மழை பொழிதற் குரிய மனைகளில் உலாவ, சையமலையில் புயலுருக்க வையையாறு நீர்மல்கி ஓடியதெனப் பரிபாடலில் மதுரையாசிரியர் நல்லந்துவ னார் நவின்றுள்ளார். அறிவியல் அறிஞர்கள் தாம் கண்ட புதுப் பொருட்குத் தம் பெயர் சூட்டுதல் இக்கால மரபு. பரிபாடலில் "பொதியில் முனிவன்" என்றொரு மீனைப் புலவர் புகல்கின்றார்; இதனை அகத்திய மீன் என்று அறிஞர் அழைப்பர். இம்மீன் பற்றிய நிலையைத் தெளிவாக ஆய்ந்தவர் அகத்தியனார் ஆதல் கூடும். பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை, அகநானூறு, புற நானூறு, மதுரைக்காஞ்சி, பெரும்பாணாற்றுப்படை, நற்றிணை முதலிய சங்கத்துச் சான்றோர் பனுவல்களில் கோள்நிலை பற்றிய குறிப்புக்கள் பொறிக்கப்பெற்றிருத்தலைக் கூர்ந்தெண்ணுங்கால், பண்டைத் தமிழர்க்கும் வானநூற் புலமையில் பங்கு உண்டு

* பக்கம் கஉ௭, 5, 6, 7 ஆம் வரிகள் காண்க.

என்னும் உண்மை உறுதியாகும். எனவே, கி. பி. 200 இல் யவனரிடம் தமிழர் கோள்கிலைப் புலமை கொண்டனர் என்று கூறுதல் நேரிதாகத் தோன்றவில்லை. எனவே, நக்கீரர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டினர் என்றே இயம்பலாம்.

இனி, பத்துப் பாட்டுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படையைத் திருவாய் மலர்ந்த நக்கீரர் சங்ககால நக்கீரர் அல்லர் என்றும்; அவர் கி. பி. 5ஆம் நூற்றாண்டினர் என்றும் பிள்ளை அவர்கள் சொல்லுதற்கு உரிய காரணங்கள் இவையாம் :—

1. திருமுருகாற்றுப்படை தொல்காப்பியத்திற்குப் பொருந்துமாறில்லை.

2. மாரைக்கிளவி தொல்காப்பியத்திற்குப் பொருந்திச் சங்க இலக்கியங்களுட் பயின்றுவருதல் போலாது திருமுருகாற்றுப்படையில் ஒரோவோரிடத்துப் பொருந்தாப் பயிற்சி காணப்படுதல்.

3. ஒரோவோரிடத்தில் "பெறீஇயர" என்னும் சொல் எச்சமாயாதல், வியங்கோளாயாதல் வாராமை.

4. 'மதி' இடைச்சொல் ஒரோவோரிடத்தில் படர்க்கையில் வருதல்.

5. தொகைநூல் பாக்களைப் பாடிய நக்கீரர் உலகமும் திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் உலகமும் வேறுபடுதல்.

6. புராணச் செய்திகள் திருமுருகாற்றுப்படையிற் காணப்பெறுதல்.

இவர்கள் கூறும் காரணங்களை முதலில் ஏற்றுக்கொள்வோம். இவர்தம் கொள்கைப்படியே கி. பி. 2ஆம் நூற்றாண்டில் எழுந்த சங்கப் பாக்கள் தொல்காப்பியத்திற்குப் பொருந்துகின்றன என்று புகல்வதால், சங்கப் பாக்களுக்கு முற்பட்டே தொல்காப்பியம் யாக்கப்பெற்ற உண்மை உணரலாம். என்றாலும், தம் "தமிழ்ச்சுடர் மணிகள்" என்ற நூலில் தொல்காப்பியர் கி. பி. 5ஆம் நூற்றாண்டினர் என்று கூறுதல் ஏற்றதாகத் தோற்றவில்லை.

இனி, திருமுருகாற்றுப்படை கி. பி. 5ஆம் நூற்றாண்டில் எழுந்த நூல் என்னற்கு இவர்கள் காட்டும் காரணங்களின் வலிவு மெலிவுகளை ஆராய்வோம்.

1. திருமுருகாற்றுப்படை தொல்காப்பியத்திற்குப் பொருந்தாமை

திருமுருகாற்றுப்படை தொல்காப்பியத்திற் கூறப்பெறும் ஆற்றுப்படை இலக்கணத்திற்குப் பொருந்துமாற்றை நச்சினார்க்

கினியர் காட்டியுள்ளார். இவ்வுரையாசிரியர் தாம் கொண்ட மாட்டிலக்கணப்படி சூத்திரங்களைக் கூட்டிக் கொணர்ந்து கூறும் விளக்கம் விழுமியது அன்றெனப் பிள்ளையவர்கள் வெறுக்கின்றனர். இவர்கள் கொள்கைப்படியே தொல்காப்பியர் கூறும் ஆற்றுப்படை இலக்கணத்திற்கு முருகாற்றுப்படை பொருந்தாதென்றே கொள்வோம். அதற்காக அதனைச் சங்கப்பனுவல் அன்றெனச் சாற்றுதல் சரிதானா? சங்க இலக்கியங்கள் எல்லாம் தொல்காப்பியத்திற்கு முழுமையும் ஒத்துள்ளனவா? தொல்காப்பியர் கூத்தர், பாணர், பொருநர், விறலியாற்றுப்படைகட்கே இலக்கணம் கூறினர். புலவராற்றுப்படைக்கு இலக்கணம் தொல்காப்பியத்தில் இல்லை. ஆயின், பரணர் பாடிய புறம் 141ஆம் பாடலும் பொய்கையார் பாடிய புறம் 48, 49ஆம் பாக்களும் புலவராற்றுப் படைகளாகத் திகழ்கின்றன. எனவே, தொல்காப்பியர் கூறியவாறுதான் ஆற்றுப்படை அமைவுறல் வேண்டும் என்பது ஆகாது; தொல்காப்பிய விதிவகையானும் அமையலாம்; அவ்விதியின் நீங்கிப் புதுநெறியிற் போந்து இலக்கியம் செய்யவும் செந்நாப் புலவர்க்கு உரிமை உண்டு. 'சகரக்கிளவியும் ஞகரக் கிளவியும் யகரக்கிளவியும் மொழிக்கு முதலில் வாரா' என்பர் தொல்காப்பியர்; சங்கப் பாக்களில் மொழி முதலாக வருமிடங்கள் பல. வியங்கோள் முன்னிலையில் கூடாதென்னும் தொல்காப்பியம்; சங்கப்பாக்களில் முன்னிலையில் வருமிடங்கள் பல. அன்விகுதி ஆண்பாற் படர்க்கைக்கே உரியதென்பர் தொல்காப்பியர். சங்கப் பாக்களில், "உதவியோ உடையன்" (அகம் கஅரு) "கொண்டு வந்தனன்" (புறம் கபிலர்), "பாடுவன்" (புறம் ருரு) எனத் தன்மையில் வருதல் உண்டு. இங்ஙனம் தொல்காப்பிய மரபுகள் பல சங்க காலத்தில் மாறியுள்ளன. தொல்காப்பியர் காலத்திற்குப்பின் எத்துணையோ புது மரபுகள் பிறந்துள்ளன. அவற்றிற்கெல்லாம் அவரே இடமளித்துப் போந்தனர். இலக்கணம் பகவரிய பரல்போல்வதன்று; அது விரிந்துகொண்டே செல்லும்; இலக்கணத்தின் விரிவு இலக்கியத்தின் மிகுதியைக் காட்டும்.

(தொடரும்)

தொடர் மொழி

[வித்துவான். திரு. வே. சிவசுப்பிரமணியன்]
(விரிவுரையாளர், தமிழ்க் கல்லூரி, மயிலம்)

அறிவுடை ஒருவன் பொருளை உணர்தற்குச் சொல்லைக் கருவியாகப் பயன்படுத்துகிறான். எழுத்துக்கள் தம்மை உணர்த்தாமல் பொருளை உணர்த்தித் தனித்து வந்தாலும் இரண்டு மூன்று எனப் பொருளை உணர்த்தும் வகையில் கூடிவந்தாலும் அவை மொழியாகும்.

எழுத்து தனித்து வந்ததால் அது மொழியல்ல என்றாகாது. கூடி வந்ததால் அது மொழி என்றும் ஆகாது. எங்கும் பொருளை உணர்த்தினால் அது மொழி ஆகும். பொருள் உணர்த்தாதது மொழி ஆகாது. இங்ஙனம் வரும் மொழிகளைத் தொல்காப்பியர் மூவகையாகப் பிரிப்பர்.

> "ஓரெழுத் தொருமொழி ஈரெழுத்தொரு மொழி
> இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட
> மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே."
>
> (தொல். மொழி மரபு - கஉ)

என்பது தொல்காப்பியர் கொண்ட முறையாகும். ஒன்று இரண்டு, பல என்னும் முறைபற்றி இங்கே மொழிகள் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இரண்டு, பல என்று கூறும் முறையைத் தொல்காப்பியர்பால் பிற இடங்களில் கூடக் காணலாம். உம்மைத்தொகைச் சூத்திரத்தின் கண்ணும் "இருபெயர் பல்பெயர்" என்று இருவகையாகப் பிரித்தார்.

இனி மொழிகளை மூவகையாகப் பாகுபாடு செய்து காட்டிய தொல்காப்பியச் சூத்திரத்துக்கு உரை செய்த பெருமக்கள் இருவர். இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் ஆவர். இவ்விருவருள் நச்சினார்க்கினியர் செய்யுளியற் கருத்தை உட்கொண்டு ஒற்றும், ஆய்தமும், குற்றியலுகரமும் எழுத்து எண்ணப்படா என்று கொண்டு கணக்கிட்டு மணி, வரகு, கொற்றன் என்பனவற்றை ஈரெழுத்தொருமொழி என்று கூறுவர். இவர் ஒற்றும் குற்றியலுகரமும் எழுத்து என்று கொண்டு, மணி ஈரெழுத்தொருமொழி என்றும், வரகு மூவெழுத்தால் ஆகிய தொடர்மொழி என்றும், கொற்றன் நான்கெழுத்தால் ஆகிய தொடர்மொழி என்றும் உதாரணம் கூறுவார். பால் மாறுகொளக் கூறல் என்னும் குற்றம் தங்கும் என்று காட்டி மறுப்பர். அவர் கூற்று பொருத்தம் இல்லாமையை முதலில் காண்போம்.

ஒற்று, குற்றியலுகரம் முதலியவற்றை எழுத்தாகக் கொள்ளாது தள்ளி ஈரெழுத்தொருமொழிக்கும், தொடர்மொழிக்கும் உதாரணம் காட்டிய நச்சினார்க்கினியரே,

> "அவற்றுள்,
> மெல்லெழுத் தியற்கை உறழினும் வரையார்
> சொல்லிய தொடர்மொழி இறுதி யான."
>
> (தொல். தொகைமரபு-ந)

என்னும் சூத்திர வுரையில், "வருமொழி முற்கூறியவதனால் ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழிகளுள்ளும் சில உறழ்ச்சி பெற்று முடிதல் கொள்க. பூஞெரி, பூஞ்ஞெரி, நுனி, முரி, காய்ஞெரி காய்ஞ்ஞெரி நுனி முரி என வரும்" என்று எழுதுவர். இங்கு, பூ என்பது ஓரெழுத்தொருமொழி என்றும், காய் என்பது ஈரெழுத்தொருமொழி என்றும் காட்டப்படுகிறது. இது நச்சினார்க்கினியர்க்கே மாறு கொளக் கூறல் என்னும் குற்றத்தை ஏற்றுவதாகிறது. அன்றியும்,

> "தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்
> லகரம் றகரவொற்று ஆகலும் உரித்தே."

என்னும் உயிர் மயங்கியல் பன்னிரண்டாம் சூத்திரத்துத் 'தொடரல் இறுதி' என்பது பல சில என்பவற்றையே குறிக்கும் என்பர். தொடர்மொழி அல்லாதவற்றின் அகர இறுதி என்பது அதன் பொருள் ஆகும். தொடர்மொழி அல்லாதன ஓரெழுத்தொருமொழியும், ஈரெழுத்தொருமொழியும் ஆம். ஓரெழுத்தொருமொழியுள் அகர ஈறாய் வருவது சுட்டு அன்றி வேறில்லை. சுட்டின் முன்னர் நாற்கணமும் புணருமாறு முன்னர்க் கூறி விட்டபடியால் அது இச் சூத்திரத்துக் கொள்ளப்படவில்லை. எனவே ஈரெழுத்தொருமொழியுள் அகர ஈற்றைக் குறிப்பதாயிற்று 'தொடரல் இறுதி' என்பது; அது பல, சில என்பதாம். நச்சினார்க்கினியர் கொள்கைப்படி கொள்ளின் தொடரல் இறுதி என்பது பல, சில என்பவற்றையே வரைந்து சுட்டாது. பல்ல, சில்ல, உள்ள, இல்ல என்றவற்றுள்ளும் மெய்யைத் தள்ளிக் கணக்கிட்டவழி அவையும் ஈரெழுத்தொருமொழியுள் அகர வீறு ஆகலாம் அன்றோ?

அன்றியும் குற்றியலுகரப் புணரியலில் ஈரெழுத்தொரு மொழி என்று கூறிய பல இடங்களிலும் நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தையே உதாரணம் காட்டலும் நச்சினார்க்கினியர் கருத்துக்குப் பொருந்தாததாம். 'நாடு' என்னும் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் அவர் கருத்துப்படி குற்றியலுகரம் தள்ளிக்

கணக்கிடப்பட்டு ஓரெழுத்தொரு மொழியாகுமே அன்றி ஈரெழுத்தொரு மொழியாதல் எவ்வாறு?

எனவே இத்தகைய பல காரணங்களாலும் மாறுகொளக் கூறலாய் உரை செய்தவர் நச்சினார்க்கினியரே என்பது தேற்றமாதலால் இப்பகுதிக்கு நேரிய பொருள் கொண்ட இளம்பூரணர் உரையை ஒட்டித் தொல்காப்பியரது தொடர்மொழிக் கருத்தினை ஆராய்வோம். ஈரெழுத் தொருமொழி, தொடர்மொழி என்னும் இரண்டு பாகுபாடுகளை அமைத்துக்கொண்ட தொல்காப்பியர் தாம் கொண்ட அப் பாகுபாட்டைக் குற்றியலுகரப் புணரியலிற் பல இடங்களிலும் கையாளுவர். நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தை ஈரெழுத்தொருமொழி என்றும், மற்றவற்றை உயிர்த்தொடர், இடைத்தொடர், மென்றொடர், வன்றொடர், ஆய்தத் தொடர் என்றும் ஆளுதலை அவ்வியலில் பரக்கக் காணலாம்.

ஈரெழுத் தொருமொழி, தொடர்மொழி என்று வகை பிரித்த தொல்காப்பியர் ஈரெழுத் தொருமொழிகளைத் தொடர் மொழி என்று கொண்டாரா? தொடரா மொழி என்று கொண்டாரா? இரண்டு எழுத்தும் தம்முள் தொடராவிடில் மொழியாமாறு எங்ஙனம் என்னும் ஐயம் தோன்றுகிறது.

மொழி வகையில் அவை மூன்றாய் இருப்பினும் தனித்து வருதல், தொடர்ந்து வருதல் என்று பண்பு நிலையில் அவை இரண்டாய் அடங்கும் என்று கண்டவர் நன்னூல் ஆசிரியர். அதனால் அவர் தனித்து வருதல், தொடர்ந்து வருதல் என்னும் பண்பு பற்றியே பாகுபாடு அமைத்தார். ஈரெழுத் தொருமொழி, தொடர்மொழி என்று பிரித்ததனாலேயே தொல் காப்பியர் ஈரெழுத் தொருமொழி தொடர்மொழி அல்ல என்னும் கருத்துடையவர் என்று கூறிவிட முடியாது. ஏன் எனில் ஈரெழுத் தொருமொழி தொடர்மொழி அல்லவாயின், அவ் இரண்டெழுத்துக்களும் தம்முள் ஒன்றை ஒன்று தொடராது பிரிந்திசைக்குமாயின் அவை மொழியாய் ஒரு பொருளைச் சுட்டுமாறு எவ்வாறு? எழுத்துக்கள் தம்முள் தொடர்ந்து வரும் மொழிகளையே ஈரெழுத்தொருமொழி என்றும், இரண்டிறந்து இசைக்கும் தொடர்மொழி என்றும் இருவகையாகப் பிரித்தார். அதற்கு அவர் தொடர்மொழி என வாளா கூறாது இரண்டு இறந்து இசைக்கும் என அடைமொழி கொடுத்துக் கூறியதே சான்றாவது காண்க. இரண்டு எழுத்துக்களுக்கு மேற்பட்டு வருவதுதான் தொடர்மொழி என்ற கருத்து அவருக்கு இருக்குமாயின் தொடர்மொழி என்று வாளா கூறினும் போதும். அவ்வாறு இன்றிச் சில்வகை எழுத்தில் பல்வகைப்

பொருளைச் செவ்வன் ஆடியிற் செறித்து இனிது விளக்கும் சூத்திர யாப்புள் வேண்டா கூறலாய் இரண்டு இறந்து இசைக்கும் என்று கூறியிரார் அன்றே? ஆதலின் இரண்டாய் இசைப்பதும் தொடர்மொழி, இரண்டு இறந்து இசைப்பதும் தொடர்மொழி என்பது அவர் கருத்தாகும் என்பது தேற்றம். இரண்டாய் இசைப்பதை 'ஈரெழுத்தொருமொழி' என்னும் பெயரால் குறிப்பிட்டார் ஆதலின் அதற்கு மேற்பட்டதைத் 'தொடர்மொழி' என்னும் பெயரால் குறிப்பிட்டார். தொடர்மொழி என்னும் பெயர், காரணம் கருதியவழி ஈரெழுத் தொருமொழியையும் குறிக்கும் ஆயினும் தொல்காப்பியர் அதைக் காரண விடுகுறிப் பெயராக இரண்டெழுத்துக்களுக்கு மேற்பட்ட எழுத்துக்களான் ஆகிய மொழிகளைக் குறிக்க வழங்கினர் என்று கொள்க.

"தொடர் அல் இறுதி" என்னும் சூத்திரத்துத் தொடர் என்பது மேற்காட்டிய காரண விடுகுறிப் பெயராகிய தொடர் மொழியைக் காட்டி நிற்றலின் 'தொடர்மொழி அல்லாத ஈரெழுத் தொருமொழியாகிய பல, சில என்னும் அகர ஈற்றுச் சொல்' என்று இளம்பூரணர் உரை கண்டார். 'தொடர்' என்பது தொடரும் தன்மையைக் குறிப்பிடுவதாகப் பொருள் செய்யப் படாமல் 'தொடர் மொழி' என்று உரை செய்யப்பட்டிருப்பதை நோக்குக.

ஈரெழுத்தொருமொழிகளைத் தொடர்தல் தன்மை உடையது என்று தொல்காப்பியர் கொண்ட வேறு இடங்களும் சில காண்போம்.

"நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி ஈற்றும்
குற்றிய லுகரம் வல்லாறு ஊர்ந்தே." (தொல். மொழி மரபு-௩)

என்பது குற்றியலுகர இலக்கணம் கூறும் நூற்பா. குற்றிய லுகரம் (உ) வல்லெழுத்துக்கள் ஆறினையும் ஊர்ந்து (கு, சு, டு, து, பு, று) நெட்டெழுத்தின் பின்னும், ஐவகைத் தொடர் மொழிகளின் இறுதியிலும் வரும், என்பது இதன் பொருள். நெட்டெழுத்தின் பின் வருவது 'நாடு' என்பது. நா என்பது நெட்டெழுத்து. அதன்பின் 'டு' என்னும் குற்றியலுகரம் வருகிறது. தொடர்மொழி இறுதியில் வருவது 'வரகு' என்பது. 'வர' என்பது தொடர்மொழி. அத் தொடர்மொழியின் இறுதி யில் 'கு' என்னும் குற்றியலுகரம் வருகிறது. இவ்வாறு விளக்கம் காண்புழி 'வர' என்னும் ஈரெழுத்தொருமொழியைத் தொடர் மொழி என்றே கொள்ளவேண்டியதாகிறது. ஈண்டுத் தொடர் மொழி என்பது தொடரும் தன்மையுடைய மொழி என்ற பொருளில் நிற்கிறது.

"குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத் தியல."
(தொல். மொழி மரபு - ௧௭)

"தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத்து இயல—தொடர்மொழிக்கீழ் நின்ற ரகார ழகாரங்கள் எல்லாம் நெடிற்கீழ் நின்ற ரகார ழகாரங்களின் இயல்பை உடைய" என்பது இளம்பூரணர் உரை. இதற்கு எடுத்துக்காட்டு அகர், புகர், அகழ், புகழ் என்பது. இவற்றுள் தொடர்மொழி அக, புக என்பவை. அவற்றின் கீழ் ரகார, ழகாரம் வருகிறது. இவ்வாறு வரும் பலவிடங்களிலும் தொல்காப்பியர் கருத்து அறிந்து இளம்பூரணர் உரை செய்தல் அறியத்தக்கது.

ஈரெழுத் தொருமொழிகளும் தம்முள் தொடர்ந்தனவே, அம் முறையில் அவையும் தொடர்மொழிகளே என்று கொண்ட தொல்காப்பியர் அவ்வாறு அவற்றைத் தொடர்மொழிக்கண் அடக்கி மொழிகளை இருவகையாகப் பிரிக்காமல் மூன்றாகப் பிரித்தார். தொல்காப்பியர் பெருக விரித்துக் கூறியனவற்றை நன்னூலார் அவற்றிடையே காணும் பொதுப் பண்புகளை ஆய்ந்து மேலும் சுருக்கி வகைப்படுத்துதலைப் பலவிடங்களிலும் காணலாம்.

தொல்காப்பியர் புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்று பிரித்துச் செய்தனவற்றை நன்னூலார் உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்று வகைப்படுத்தியதும், அவற்றுள்ளும் பல இலக்கணங்களைத் தொகுத்துச் சுருக்கியதும் காண்க. "இரு பெயர் பல் பெயர் அளவின் பெயரே" என்னும் எச்சவியல் சூத்திரத்துத் தொல்காப்பியர் பலவாறு பிரித்த உம்மைத் தொகையைப் பொதுமை கண்டு சுருக்கி,

"எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனும்நான்கு அளவையுள் உம்இலது அத்தொகை."

என்று நன்னூலார் கூறியதும் காண்க.

இப்முறை பற்றியே நன்னூலார்,

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும்."

என்னும் பதவியல் முதற் சூத்திரத்தே தனித்து வருதலும், தொடர்ந்து வருதலும் ஆகிய பண்பு பற்றி எழுத்தானும் மொழியை இருவகையாகப் பிரித்தார். இதனுள் மறைந்து கிடக்கும் பல பொருள்களையும் விரித்துக்காட்டித் தொல்காப்பியரது கருத்தை விளக்கிய பெருமை நன்னூல் உரை ஆசிரியர்களுடையதாகும்.

ஈரெழுத்தொரு மொழிகளையும் தொடரும் மொழிகள் என்று கருதிய தொல்காப்பியர் அவற்றைத் தொடர்மொழிக்கண் அடக்கி மொழிகளை இருவகையாகப் பிரிக்காத தன்மையைச் சுட்டுகிறது நன்னூற் பதவியல் முதற் சூத்திரத்துள் உள்ள "தொடர்ந்தும்" என்னும் பகுதி ஆதலின் "இச் சூத்திரத்துள் தொடர்ந்தும் என்பது பிறர் நூல் குற்றம் காட்டல் என்னும் மதம்" என்று உரை யெழுதிப் போந்தனர் நன்னூல் உரையாசிரியர்கள். 'குற்றம் காட்டல்' என்றே ஒழியாது "குற்றங் காட்டல் என்னும் மதம்" என்று எழுதியுள்ளமையும் கருதுக.

இவற்றால் தொல்காப்பியரது தொடர்மொழி பற்றிய கருத்தும், தொல்காப்பியர் கருத்தை அறிந்து எழுதிய நன்னூல் உரையாசிரியர்கள் உரை முன்னொடு பின் மலையாமையும் விளக்க மாதல் காண்க.

பொருள் தலைப்புக்கள்

அண்மையில் மேலை நாடுகளுக்குச் சென்று திரும்பிய பத்மஸ்ரீ டாக்டர், எஸ். ஆர். அரங்கநாதன், எம். ஏ., டி. லிட். அவர்கள் அக்டோபர்த் திங்கள் பதினேந்தாம் நாளன்று மாலை 6-30 மணிக்கு மறைமலையடிகள் நூல்நிலையத்தில் "தமிழில் பொருள் தலைப்புக்களை எவ்வாறு பெருக்குவது" என்ற பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினர். கழக ஆட்சியாளர், திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களின் வரவேற்புரையுடன் சொற்பொழிவு தொடங்கியது.

"நூல்களை வகைப்படுத்தும்போது சரியான முறையில் வகைப்படுத்தி அதற்குரிய பொருட் டலைப்பின் கீழ் அவற்றைக் கொணரல் வேண்டும். நூலகத்தில் படிக்க வருவோரும் தங்களுக்குத் தேவையான கருத்தின் பொருட் டலைப்பைச் சரியாகக் கூறவேண்டும் என்று கூறினார். மேலும் "புதிய புதிய துறைகளில் தமிழ் மொழியில் நூல்கள் இயற்றப்படுமேயானல் பொருட் டலைப்புக்கள் பெருகும்" என்று குறிப்பிட்டார்.

அமெரிக்காவினின்று திரும்பிவரும் வழியில் ஜெர்மனிக்கும் போலந்திற்கும் ரஷ்யாவிற்கும் சென்றதைக் குறிப்பிட்டார். அந்நாட்டு நூலகத் துறையில் பணிபுரிவோர் இவர்தம் சொற்பொழிவுகளுக்குப் பெருந் திரளாகக் கூடிவந்து பயன்பெற்றனராம். சென்ற விடங்களிலெல்லாம் நூலகத்துறை அறிஞர் என்ற முறையில் இவர்க்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

தீப நாடகங்கள்

[திரு. பா. பச்சையப்பன்]

(செல்வி சிலம்பு கூச, பரல் உ, ௮0 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரிசியன் : அப்படியும் சொல்லுவையோ? ஆயின் கேள். நீ சூள் உரைத்தது உன் தலைக்கே வந்து முடிந்தது. இந்த நாட்டை மாசுபடுத்தியவன் நீயேதான்.

ஒதிபன் : உனக்குச் சொல்லவும் துணிவு பிறந்ததா? வெட்க மற்றவனே! இதன் பயனைப்பெறுமல் மீண்டுவிடுவாய் என்று நினைக்கிருயா?

திரிசியன் : நான் தப்பினேன்; உண்மை யென்பக்கம் இருக் கிறது.

ஒதிபன் : யாருடைய வேலை இது? இதுதான் வருபொருள் உரைத்தலா!

திரிசியன் : நீ சொல்லிக்கொடுத்தாய்; நீதான் என் விருப்பத் திற்கு மாருகச் சொல்லவேண்டுமென்று விரும்பினுய்.

ஒதிபன் : மறுமுறையும் சொல்; குற்றமில்லாதிருக்கட்டும்.

திரிசியன் : நான் சொல்லியது விளக்கமாக இல்லையா? ஏன் என்னை மேலும் சொல்லச் சொல்கிருய்?

ஒதிபன் : ஐயத்திற்கிடமின்றி அறிய விரும்புகிறேன். மறு முறையும் சொல்.

திரிசியன் : கொன்றவன் யாரென்று அறிய விரும்பும் நீயே கொன்றவன்.

ஒதிபன் : இரண்டாம்முறையும் சொல்; பின் வருந்தாதே!

திரிசியன் : உன் சினத்தைத் தூண்ட இன்னும் சொல்ல வேண்டுமோ?

ஒதிபன் : ஆம்; மேலும் சொல். உனக்குத் தெரிந்தவை யெல்லாவற்றையும் சொல்.

திரிசியன் : உனக்குத் தெரியாதன எனக்குத் தெரியும். நீ அன்புடன் வாழும் இல்லக்கிழத்தி உனக்கேற்றவளல்லள். அவளுடன் கூடியிருப்பது பழியும் பாவமும் ஆகும்.

ஒதிபன்: இவ்வாறு பழிச்சொற்களைச் சொல்லியும் தண்டனையின்றிச் செல்லவும் கூடுமா?

திரிசியன்: உண்மை என்பதற்குக் காப்பாற்றும் சக்தியிருக்குமாயின், இவற்றைச் சொல்கிறேன்.

ஒதிபன்: உண்மைக்கு அச்சக்தியுண்டு. ஆனால், வெட்கமற்றவனே! ஏழையே கெட்டவனே! கண்ணற்றவனே! அறிவற்ற இழிஞனே! உனக்கல்ல; உனக்கல்ல.

திரிசியன்: உனக்காக இரக்கப்படுகிறேன். இவ்வாறான வசைமொழிகளைக் கூறாதே! இவ்வாறே ஒருநாள் உன்னையும் மக்கள் வாய் தூற்றும்.

ஒதிபன்: பகலென்று அறியாமல் குருட்டுத்தன்மையால் இருள் சூழ்ந்த உன்னால் எனக்குத் தீமை செய்ய இயலாது. கண்ணிருக்கும் பிறராலும் தீங்கு செய்ய இயலாது.

திரிசியன்: உன்னை இழி நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்பது என் கருத்தல்ல. ஆயின் அது தெய்வத்தின் கையிலிருக்கிறது. அது செய்தே தீரும்.

ஒதிபன்: (கிரியன், கோயிலுக்கனுப்பிச் செய்தி தெரிந்துவந்ததை நினைவு கூர்ந்து) கிரியன்; அவனுடைய சூழ்ச்சியாகத்தானிருக்கும், உனதாக இல்லையானால்!

திரிசியன்: அவனதும் அல்ல; நீ உனக்குப் பகைவன்.

ஒதிபன்: (ஏதோ தனக்குள் நினைத்தவனாய்) ஆ, பொருளும், அரசும், அறிவும், வாழ்க்கை ஓட்டத்தில், பொறாமைக்கு ஆட்படவேண்டுமோ? என்னுடன் இத்தனை காலமாக நட்புடன் இருந்த கிரியன், என் நம்பிக்கைக்கு ஏற்ற நண்பன், என்னை மறைவிலிருந்து குத்த வேண்டுமோ? இந்நகர் எனக்களித்த உரிமையினின்றும் கழிக்கப் பாடுபட வேண்டுமோ? யான் கேளாமலேயே எனக்கு இவ்வரசை அளித்தனர். இந்த எளியன் வருவது உரைப்பதாகப் பேர் சொல்லி இப்போது இவனை எனக்கு எதிராக அனுப்பியுள்ளான். (திரிசியனைப் பார்த்து) இப்படி வருவதுரைப்பதற்குக் கூலி என்னவோ? நம் மக்கள் நன்கு வாழ்வதற்கு நீ சொல்லும் உபாயந்தான் என்ன? பாமர மக்களுக்குப் புரியும்படி சொல்.

கோரஸ்: ஐயா, நீங்கள் இருவரும் கோபத்தால் பேசிவிட்டீர்கள்! இது நல்லதல்ல; தெய்வத்தின் கட்டளையை

எவ்வாறு நிறைவேற்றுவது என்பதில் நம் கருத்தைச் செலுத்தவேண்டுவதுதான் இப்போது செய்யவேண்டியது.

திரிசியன்: அரசே! நாமெல்லோரும் நீதியின்முன் சமமானவர்களே! அதை நான் உரிமையாகக் கேட்கிறேன். நான் உன் ஏவலாளல்லன். லோகியனின் அடிமை. கிரியன் எனக்கு இது செய்வான் என்று ஏதும் செய்ய நான் கடமைப்பட்டவனும் அல்லன். என் குருட்டுத்தனம் உனக்குச் சிரிப்பை விளைவித்து நகையாடச் செய்துவிட்டது. உனக்குக் கண்ணிருக்கிறதா? உனக்கு நேர்ந்துள்ள தீமையை அறிய முடிகிறதா? உன் தந்தை தாய் யாவர்? உனக்குச் சொல்லுகிறேன் கேள். நீ பாபம் செய்துவிட்டாய். படுகுழியில் கிடக்கிறாய். உன்னைப் பழிவாங்க இரு பக்கமும் கூர்மையான சக்தி வந்துள்ளது. உன் தாய் தந்தையர் சாபம் இந்த நாட்டினின்றும் உன்னை ஒட்டிவிடும். நன்றாய் அனைத்தையும் பார்க்கும் நின் கண்கள் இருண்டுவிடும். உன் திருமணத்தின்போது வரவேற்ற இன்னிசை முதலியன மாய்ந்தபோகும். உன்னை இந்த நாட்டின் தந்தையென்போர் உன்னை யார் என்றறிந்து இழிவு படுத்துவர். கிரியனை எவ்வளவு வேண்டுமாயினும் எள்ளி நகையாடு; என்னையும் இழிவு படுத்து. ஆயின் மனிதனுக்கு நேர்ந்திராத இழிநிலை நினக்குக் கிட்டுவது திண்ணம்.

ஒதிபன்: நீ சொல்வதையெல்லாம் பொறுத்துக்கொள்ளவேண்டுமா? என்முன் நில்லாதே! போ! செல், ஓடு; எங்கிருந்து வந்தாயோ அங்கேயே செல்! போ.

திரிசியன்: செல்கிறேன்; உன் கட்டளையால் இங்கு வந்தேன்; உன் விருப்பத்தாலன்று.

ஒதிபன்: பித்தனின் சொல்லம்புகளைத் தாங்கவேண்டுமென்று தெரிந்திருந்தால் அதனைத் தடுத்திருப்பேன்.

திரிசியன்: உனக்கு யான் பித்தனாகப்படலாம். உன் தாய் தந்தையர் அவ்வாறு நினைத்தார்களில்லை.

ஒதிபன்: என்ன சொல்கிறாய்? என் பெற்றோர்களா? என்னை ஈன்றவர் யார்?

திரிசியன்: இன்று நீ பிறந்த வரலாற்றினை அறிவாய்! இன்றே உனக்கு அழிவு காலமும் கிட்டும்.

ஒதிபன்: அற்பனே! இன்னும் இரண்டுபட மொழியவேண்டுமோ!

திரிசியன் : இருபொருள் படுஞ்சொல்லின் சிக்கறுக்க வல்லனல்லவா நீ!

ஒதிபன் : என்னைக் குத்திக் காட்டாதே.

திரிசியன் : நான் செல்கிறேன். பையா, உன் கையைக் கொடு. என்னை வீட்டுக்கு அழைத்துச் செல்.

ஒதிபன் : உன்னை ஒன்றும் செய்யமாட்டோம். அவன் உன்னை அழைத்துச் செல்லட்டும்.

திரிசியன் : நான் சொல்லவேண்டியதைச் சொல்லிய பிறகு செல்கிறேன். எனக்குத் தீங்கு செய்வதைப் பற்றி அஞ்சாமல் உன் முகத்துக்கு எதிரே சொல்கிறேன். இலேயனைக் கொன்றவன் எவன் என்று அறிந்துகொள்ளக் கூச்சலும் குழப்பமும் செய்தாய். இலேயனைக் கொன்றவன் இங்கே தான் இருக்கிறான். வேற்றவன் போலிருக்கிறான். நம்மிடையேதான் இருக்கிறான். தீப நாட்டிற் பிறந்தவன் தான். கண்ணோடு வந்தான், குருடனாகப் போகிறான். இப்போது செல்வன்; பின்னர் பிச்சைக்காரன். கையில் தடி! வழி தெரியாது தவித்து வேற்று நாட்டிற்குச் செல்கிறான். பிறந்தவர்களுக்கு உடன்பிறந்தான், தந்தையுமானான்; தாய்க்கு மகன், அத்தாய்க்குக் கணவனுமானான்; தந்தையைக் கொன்றான். அத் தந்தையின் இடத்தைப் பற்றிக் கொண்டான். இவற்றை எண்ணிப்பார். என்னைப் பிழைபடச் சொன்னவன் என்று துணிந்தாயாயின் பின் என்னைக் குருடன் என்று சொல்.

(செல்கிறான்)

கோரஸ் : தெலுவியத்து வருவதொரு தெய்வமொழி பழிப்பதுகேள்
கொலுவதற்குத் துணிந்தவனர் கொடுமையினர் ஓடுகவே
பலவிதமாய் வருத்துமிந்தப் பலநோய்க்குங் காரணன்யார்
உலவுமவன் எங்கிருப்பன் உணர்ந்தவனை ஓட்டுவமே.
மறைபொருளை அறியுமவர் வான்சியனும் அபலனுமே
அறையுமிந்த அழிசொல்லுக் கரசனிவன் ஒதிபனுமோ
குறையிலிபல் குணத்திவனைக் குறைகூறும் வழியுளதோ
நிறையறிவின் திறனுடைய தெய்வங்காள் வழிசெய்வீர்.

[கிரியன் வருகிறான்]

கிரியன் : நாட்டு மக்களே! அரசன் ஒதிபன் என்னைக் குறை கூறினான் என்கின்றனர். சொல்லாலோ, அன்றிச் செயலாலோ அவனுக்குத் தீங்கு செய்திலேன். அவ்வாறு செய்திருப்பேனாயின், இத் தீ நாளில் இறந்தொழிவேன். இப்பழிச் சொல்லுக்கு யான் ஆளாவேனோ!

கோரஸ் : அவன் சொல்லிய சொற்கள், வெகுண்டெழுந்தபோது வெளிவந்தவை. நன்கு தேர்ந்து சொல்லப்பெற்றன அல்ல.

கிரியன் : வருவதுரைத்தவன் யான் சொல்லிக் கொடுத்ததன் மேல் வெளியிட்டவைகள் என்ருனு?

கோரஸ் : அவ்வாறுதான் சொன்னுன். எக்கருத்துடன் சொன்னுன் என்பது எனக்குத் தெரியாது.

கிரியன் : என்ன தைரியம்! என்னை எதிர்த்தா இவ்வளவும் சொன்னுன்?

கோரஸ் : என் தலைவன் சொன்னதை யான் ஆராய்வதில்லை. இதோ வருகிருன்.

[ஒதிபன் வருகிருன்]

ஒதிபன் : நல்லது; இங்கு வந்ததேன்? என் வீட்டின் முன் நின்று பேசவும் முகமுண்டா? என் உயிருக்கு உலை வைக்கச் சூழ்ச்சி செய்பவனே! என் முடியினைத் திருடப் பார்ப்பவனே! என்னைக் கோழையென்று நினைத்தாயா? அல்லது முட்டாள் என்று நினைத்தாயா? எனக்கு எதிராக நடக்கும் சூழ்ச்சியினைப் பார்க்க எனக்கிரு கண்ணில்லையா? பணமும் நட்புமின்றி அரசு பறிக்கச் செய்கிருயே! மக்களும் மாண்பொருளும் உண்டாயின் மன்னனுகலாமே!

கிரியன் : யான் சொல்வதைக் கேள். அறிந்தபின் தீர்ப்புக் கூறு.

ஒதிபன் : உன் பேச்சு நயம் என் மனத்தை மாற்றிவிடும் என்று நான் நினைக்கவில்லை. நீ என் கடும் பகைவன் என்பது மட்டும் அறிவேன்.

கிரியன் : முதலில் நான் சொல்லிவிடுகிறேன்.

ஒதிபன் : நீ எது வேண்டுமாயினும் சொல்; குற்ற மற்றவன் என்று மட்டும் சொல்லாதே!

கிரியன் : இவ்வாறு முரட்டுப் பிடிவாதமாக இருப்பது உனக்கு நல்லதாகுமா?

ஒதிபன் : உன் வீட்டுக்கு எதிரே சூழ்ச்சி செய்து தப்பித்துக் கொள்ளக் கருதுகிருயா?

கிரியன் : அவ்வாறு நம்பினல் மூடனுவேன். இருக்கட்டும்; நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன் என்று மட்டும் சொல்.

ஓதிபன் : நீதானே அக்குருட்டுப் புலவனை வரவழைக்கச் செய்தது?

கிரியன் : ஆம் ; மறுமுறையும் அழைப்பிப்பேன்.

ஓதிபன் : ஆயின் சொல்......இலேயன் இறந்து எவ்வளவு காலமாயிற்று?

கிரியன் : இலேயன் !.......என்ன சொல்கிறாய் ?

ஓதிபன் : இலேயன் மறைந்து எவ்வளவு காலமாயிற்று ?

கிரியன் : எவ்வளவோ காலமாயிற்று, நினைவு இல்லை.

ஓதிபன் : அக்குருட்டுப் புலவன் அன்றும் இவ்வாறுதான் இருந்தானா?

கிரியன் : ஆம்; இப்போது போலவே அப்போதும் மக்கள் மதித்து வந்தனர்.

ஓதிபன் : அப்போது என் பெயரைச் சொல்லியதுண்டோ ?

கிரியன் : உன் பெயரைச் சொல்லிக் கேட்டதில்லை.

ஓதிபன் : இலேயன் இறந்தது பற்றி ஆய்ந்து பார்த்ததில்லையா ?

கிரியன் : ஆய்ந்து பார்த்ததுண்டு. ஆயின் பலன் தரவில்லை.

ஓதிபன் : அப்புலவன் ஏன் அன்று வாளாவிருந்தான்?

கிரியன் : எனக்குத் தெரியாதவற்றை எவ்வாறு சொல்ல இயலும்?

ஓதிபன் : ஒன்று மட்டும் நீ அறிவாய். அதைச் சொல்வது உத்தமம் என்று நினைக்கிறேன்.

கிரியன் : எனக்குத் தெரிந்ததை உண்மையில் சொல், ஏற்றுக்கொள்வேன். எனக்குத் தெரிந்தது என்னவோ ?

ஓதிபன் : உன் உதவியின்றி அவன் இலேயனைக் கொன்றவன் நான் என்று சொல்லியிரான்.

கிரியன் : அவ்வாறாயின் என்ன செய்வது என்று உனக்குத் தெரியும். நீ என்னை வினவியது போன்று யானும் சில கேட்கிறேன்.

ஓதிபன் : கேள் ; நான் கொலைஞன் என்று உன்னால் உணர்த்த இயலாது.

(தொடரும்)

செய்திகளும் குறிப்புக்களும்

(க) வட்டார மொழிகள் வளரவேண்டும்

"இந்தி நம்முடைய தேசிய மொழியாக இருப்பினும் மற்ற மொழிகளும் வளர்வதற்கு ஊக்கமளிக்கவேண்டும். வடநாட்டிலுள்ள மக்கள் தென்னாட்டு மொழிகளையும், தென்னாட்டிலுள்ளவர்கள் வடநாட்டு மொழிகளையும் கற்றுக்கொண்டால் இந்தியாவின் ஒற்றுமை பலப்படும். விஞ்ஞானத் தொழில் நுணுக்கக் கல்வி ஆகியவற்றிற்கு ஆங்கிலமொழி இன்றியமையாததொன்றாகும். ஆங்கிலத்தைப் புறக்கணிப்பது கூடாது" என்று 21-10-59 இல் அலகாபாத் பல்கலைக்கழகத்தில் வங்காள இலக்கியக் கழகத்தைத் துவக்கி வைத்துப் பேசிய உத்தரப் பிரதேச ஆளுநர் திரு. வி. வி. கிரி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

குறிப்பு: வட்டார மொழிகளின் வளர்ச்சிக்கு இடந்தரும் வகையிலும், ஆங்கிலத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தியும் பேசிய திரு. கிரி அவர்களின் பொறுப்புணர்ச்சி பாராட்டத் தக்கதே.

(உ) 'ஸ்ரீ' யைத் 'திரு' ஆக்குவதுபற்றி அமைச்சர் கருத்து

"ஸ்ரீ"யைத் "திரு" ஆக மாற்ற நடக்கும் முயற்சிகள் தேவையற்றவை. இதுபோன்ற நடவடிக்கைகளில் மக்கள் தம் நேரத்தைச் செலவிடுவது இன்றியமையாததென்று நான் கருதவில்லை. ஒரு மொழி உயிருடன் இருக்க - வளர்ச்சியுற பிற மொழிகளினின்றும் இன்றியமையாத சொற்களைத் தமிழாக்கிக் கொள்ளுதல் தவிர்க்க முடியாதது," என்று குடந்தை இராமசாமித் திருக்கோயிலில் நடைபெற்ற பட்டாபிடேக விழாவில், சென்னை உள்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் பேசியுள்ளார்கள்.

குறிப்பு: 'ஸ்ரீயைத் திரு' ஆக்குவதும், தமிழில் பிறமொழி கலவாதிருக்கச் செய்வதும் போன்ற முயற்சிகள் இன்று தோற்றுத்தோன்றியவையல்ல. இஃது ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் மறைமலையடிகளார் போன்ற தமிழ் அறிஞர்கள் கண்ட இயக்கம். பிறமொழியின் துணையின்றியே தமிழ் தனித்து வாழக்கூடும் என்பது அவர்கள் கண்ட முடிபு. எனவே மொழிபற்றி அமைச்சரவர்கள் கொண்டுள்ள கருத்துப் பொருத்தமற்றதென்றே சொல்லவேண்டியதாகிறது.

(ங) அரசாங்கமும் பாடநூல்களும்

"ஆரம்ப வகுப்புகளுக்கான பாட நூல்களை அரசாங்கம் வெளியிடுவது தவறானது. நூல்கள் வெளியிடுவதில் போட்டி இல்லையெனில் நல்ல நூல்கள் வெளிவர வாய்ப்பில்லாமற் போகும். எந்த நூலை ஆரம்ப வகுப்புகளுக்குப் பாட நூலாக வைக்கலாம் எனத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஆசிரியர்களுக்கே இருக்கவேண்டும். அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட நூலை வெளியிட்டு, இதையே எல்லாப் பள்ளிகளிலும் ஆரம்ப வகுப்புக்களுக்குப் பாட நூலாக வைக்கவேண்டும் எனக் கூறுமானால் அதன் விளைவு பயனளிக்கக் கூடியதாக இருக்காது. எனவே, அரசியலார் தம் போக்கைத் திருத்திக்கொள்வர் என நம்புகிறேன்" என்று 24-10-59 இல் புரசை முத்தையச் செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் சங்கச்

சார்பில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னைச் சட்டமன்ற மேல்சபை உறுப்பினர் டாக்டர், அ. சிதம்பரநாதன் செட்டியாரவர்கள் கூறினர்கள்.

குறிப்பு: திரு. செட்டியாரவர்களின் கருத்துரை மிகமிக இன்றியமையாதது. அரசியலார் இதனைக் கருத்திற்கொண்டு தம் போக்கினை மாற்றுதல் வேண்டும். பாட நூல் வெளியீடுகள் பல வெளிவர ஆக்கமளித்தல் வேண்டும். அங்ஙனமின்றி இதில் அரசியலார் குறுக்கிடுவது அறிவுக்கே தளை பூட்டுவது போலாகும்.

(ச) சென்னை அரசினரின் 'இந்தி' எதிர்ப்பு !

பஞ்சாயத்துத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் பெயர்களுக்கு இந்திப் பெயர்கள் கொடுத்து இந்தியா முழுவதும் ஒரேமாதிரியான ஏற்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று அண்மையில் இந்திய அரசினர் ஒரு திட்டம் வகுத்து அதனைச் சென்னைமாநில அரசுக்கும் அறிவித்தனர். சென்னை அரசினர் இதனை ஏற்றுக்கொள்ள மறுத்துத் தற்போதுள்ள பெயர்களே அனைவருக்கும் புரியக்கூடியதென்றும், வேண்டுமானல் இந்தியா முழுமைக்கும் ஒரு மொழி வருங்காலத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்றும் கூறிவிட்டனர். இச் செய்தியை உள்ளாட்சி அமைச்சர் திருவாட்டி லூர்து அம்மையாரவர்கள் 27-10-59 இல் செய்தி எழுத்தர்களிடம் அறிவித்தார்.

குறிப்பு: இந்த அளவில் இந்தியை எதிர்த்த சென்னை அரசினரைப் பாராட்டுகின்றேம். இத்தகைய எதிர்ப்புணர்ச்சியும் மொழிப்பற்றும் மேலும் வளர வேண்டுமென விழைகிறேம்.

(ரு) திரு. எம். கே. தியாகராச பாகவதர் மறைவு

ஏழிசை வேந்தர் எனப் புகழப்பட்டவரும், தமிழ் நாடக, திரைப்பட உலகில் புகழ்பெற்றவருமான திரு. எம். கே. தியாகராச பாகவதரவர்கள் தமது ஐம்பதாவது அகவையில் சென்னை மருத்துவ மனையில் 1 - 11 - 59 இல் காலமானர் என்ற செய்தி கேட்டு வருந்துகின்றேம். திரு. பாகவதர் அவர்களின் மறைவு தமிழ் இசையுலகிற்கு ஒரு நட்டமாகும். அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தார்க்கும் இசையுலக அன்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம். அவருடைய ஆன்மா இறையடி நீழலில் இன்புறுவதாக.

(சு) இந்திய மொழிகளின் வளர்ச்சிக்குப் புதிய திட்டம்

இந்தியாவில் வழங்கும் பல்வேறு வட்டார மொழிகளுக்கும் ஆதரவு அளிக்கும் வகையில், அவற்றின் வளர்ச்சிக்கென இந்திய மைய அரசினர் ஒரு திட்டம் வகுத்துள்ளனர். அதன்படி இதுவரையில் 3, 81,000 ரூபாய் கொடைப்பொருளாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடை, கலைக்களஞ்சியங்கள், பழைய கையெழுத்துப் படிகள், அரிய நூல்கள், இருமொழி அகராதிகள், அறிவியல் பண்பாடு தொடர்பான நூல்கள், இந்திய மொழிகளில் காணப்படும் இலக்கணம், சொற்றெடர் அமைப்பு அல்லது சிறப்புச் சொற்கள் ஆகியவைகளில் காணப்படும் ஒற்றுமைபற்றிய ஆராய்ச்சி நூல்களைத் தயாரித்து வெளியிடுதல், இலக்கிய மாநாடுகள் நடத்தல் ஆகியவற்றுக்காக வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி 1959-60 ஆம் ஆண்டுக்கு மொத்தம் 7 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத் தொகையில் சென்னை மாநிலத்தில் தமிழுக்கு 13,500 ரூபாய் கிடைத்திருக்கிறது. பொதுவாக ஒவ்வொரு மொழிவளர்ச்சிக்கும் ஏறக்குறைய 50,000 ரூபாய் கிடைக்கும். ஆனால் இந்தியும் சமக்கிருதமும் இதில் சேர்க்கப்படவில்லை. அவற்றின் வளர்ச்சித் திட்டத்தை மைய அரசினர் தனியாகக் கவனித்து வருகின்றனர்.

இந்த மொழி வளர்ச்சித் திட்டப்படி மாநில அரசினர் எந்த மொழியையும் வளர்க்கலாம். அப் பணியில் ஏற்படும் செலவில் நூற்றுக்கு 50 விழுக்காடு மைய அரசினர் உதவுவர். மொழி வளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் தனிப்பட்ட நிலையங்களுக்கு உதவும்படி மாநில அரசினர் மைய அரசினர்க்குப் பரிவுரை வழங்கலாம்.

குறிப்பு : இந்திய அரசினர் மொழி வளர்ச்சிக்கு இத்துணை ஆதரவு தர முன்வந்திருப்பது போற்றத்தக்கதே. ஆனால் ஆதரவுதரும் முறையில் எல்லா மொழிகளையும் ஒரே நிலையில் வைத்து நோக்குதல் வேண்டும். இந்திய மொழிகளில் தமிழ் மிகத் தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது. எனவே தமிழுக்கு அதிகமான ஆதரவு நல்கல் வேண்டும். அஃதின்றேல் சமக்கிருதம் இந்தி ஆகியவற்றுக்குக் காட்டப்படுவது போன்றே இதற்கும் ஆதரவு காட்டுதல் வேண்டும். அதுவே சால்புடைத்து.

(எ) முன்னாள் நிதி அமைச்சர் ஜான் மத்தாய் மறைவு

விடுதலை பெற்ற இந்தியாவின் இரண்டாவது முன்னாள் நிதி அமைச்சர் டாக்டர், திரு. ஜான் மத்தாய் அவர்கள், கடந்த 2-11-59 இல், தமது 73 ஆம் அகவையில் பம்பாயில் காலமானார் என்ற செய்திகேட்டு வருந்துகிறோம். டாக்டர் மத்தாய் அவர்கள் சிறந்த பொருள் துறை வல்லுநர். ஒரு வழக்கறிஞராக வாழ்க்கை தொடங்கிய இவர், 1918 முதல் அரசாங்கப் பணிகளில் ஈடுபட்டார். சிலகாலம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றினார். டாக்டர் சண்முகஞ் செட்டியாரவர்கள் நிதியமைச்சர் பதவியிலிருந்து விலகிய பின்னர், இவர் பதவி ஏற்றுச் சிலகாலம் நிதி அமைச்சராகப் பணியாற்றினார். இவரது மறைவு பொருளாதார உலகிற்கு ஒரு நட்டமேயாகும்.

(அ) பண்டித நேரு அவர்களின் சமயக் கொள்கை

“எனக்குச் சமயச் சடங்குகளில் நம்பிக்கை இல்லை என்பதை நான் பலதடவை கூறியுள்ளேன். எனது சமயக் கருத்து எதுவாக இருந்தாலும் சரி, என்னையே நான் அறிந்து கொள்ளவில்லை. ஆனால், விஞ்ஞானத் துறையில் இயல் நூல், இரசாயனம் முதலியவற்றில் எங்ஙனம் சில சட்டங்கள் உள்ளனவோ, அங்ஙனமே வாழ்க்கையில் நல்லது செய்வோர் நற்பயனையும், தீயது செய்வோர் தீய பயனையும் அடைவர் என்ற ஒரு சட்டம் அமைந்துள்ளது என்பதை நான் அறிவேன் ஆனால் எப்பெயரிட்டு அதனை அழைப்பது என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. அஃதொரு இயற்கைச் சட்டம் என்பேன்”* என்று 5-11-59 இல் புதுதில்லியில் நடைபெற்ற செய்தி எழுத்தர் மாநாட்டில் பேசியபோது இந்தியாவின் முதல் அமைச்சர் பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

---

* இவ்விதழில் வரும் “இயற்கை” என்னும் கட்டுரை இதற்கு விடையாகும்.

மதிப்புரை

"ஏட்டில் எழுதாக் கவிதைகள்"

[தொகுப்பு விளக்கம்: திரு. செ. அன்னகாமு, பி. ஏ., எல். டி., அவர்களால் தொகுக்கப்பெற்றது. விலை ரூபா. 2—00. கிடைக்குமிடம், ஆதாரக்கல்வி ஆசிரியப் பயிற்சிப்பள்ளி, காந்திக் கிராமம், மதுரை மாவட்டம்] ஒரு நாட்டின் உண்மையான உணர்ச்சிப் பாடல்களும், ஒழுக்க மேம்பாடும், கடவுட்பற்றம், காதலும் காவ(வீரம்)லும், ஈதலும் இசையும், உழைப்பும் உதவியும், வளமையும் வாழ்க்கையும், ஒற்றுமையும் உரமும், அந்நாட்டினிடையே வாழும் பாட்டாளி மக்களிடையே தொன்றுதொட்டு இன்றுகாறும் பொன்றாது ஒன்றுபோல் நின்று நிலவுகின்றன.

அப்பாடல்கள் "ஏட்டில் எழுதாக் கவிதைகள்" என்ற முறையில் நாட்டில் நடமாடுகின்றன. அம்மட்டோ? அவற்றை மேற்கொண்டொழுகும் மாந்தரிடையே உணர்ச்சிப் பெருக்கையும் உழைப்பூக்கத்தையும் அவைகள் ஓவாது நல்குகின்றன. களியாட்டம், கரகம், சாமியழைத்தல், இறந்த ஆவியின் வழிபாடு, தெய்வபத்தி, தாய்மை முதலியவற்றிற்கு அப்பாடல்கள் போன்று அவர்கட்குத் துணைசெய்வன வேறு ஏதுமின்று. வாழ்க்கையின்பத்தினும், தாலாட்டு முதலிய செயலினும் அப்பாடல்கள் பெருந்துணையாகின்றன. மேலும் அப்பாடல்கள் தமக்கென வமைந்த பண், தாளம், பாவமைப்பு முதலியவற்றைக்கொண்டு திகழ்கின்றன. எதுகை மோனைச்சிறப்பும் இசையினிமையும் எளிமையும், உவமை, உருவகம், உள்ளுறை முதலியனவுங் கொண்டு திகழ்கின்றன.

இத்துணைச் சிறந்த பாடல்களை இந் நூலாசிரியரவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் பெருமுயற்சிகொண்டு ஆங்காங்குச் சென்று அம்மக்களுடன் அளவளாவி அவர்தம் உணர்ச்சி வெளிப்பாட்டான் இயல்பாக வருவித்து எழுதித் தொகுத்துள்ளார்கள். இப் பாடல்களனைத்தும் அழகுற அமைவதற்கேற்ற குழைவு நம் செந்தமிழ் மொழிக்கமைந்த சீரிய இயல்பாகும்.

இதன்கண் "பாடிப் பரவசமடைவோம்" என்பது முதலாகப் பதினைந்து தலைப்புக்கள் காணப்படுகின்றன. ஆதிவாசிகளின் வாழ்க்கை வரலாறுகளும் பிறவும் விளக்கப்பட்டுள்ளன. பாட்டுக்களைச் செவ்விய முறையில் தொன்மை விளங்குமாறு அம் மக்கள் பயிலும் இயற்சொல்லால் அமைத்துள்ளனர். இவ்வாற்றால் இந் நூல் பெரியதோர் பழைமைக் கருவூலத்தொகுப்பாகும். சிறந்த அட்டைப்படத்துடன் கூடியது.

இதனைப் பொதுவாகச் செந்தமிழன்பர்களும், ஆசிரிய மாணவர்களும், பண்ணிசை வல்லார்களும் வாங்கியும் வாங்குவித்தும் போற்றுவார்களாக. இதன் வாயிலாக எஞ்சிய தொகுப்புக்களையும் ஆசிரியர் வெளியிடத் துணைபுரிவார்களாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.